www.padippakam.com



விலை 3-00 ரூபா


# ஈழ சுதந்திரன்

ELASUTANTIRAN





திருவள்ளுவராண்டு

உ௦உஎ

சித்திரை-வைகாசி

மே 1996

புத்தகம்:8 இதழ்: 6


∴ இந்திய-இலங்கை உடன்பாட்டை மறக்கடிக்க சந்திரிகா போடும் புதிய சதித் திட்டம்!

∴ உலகை ஏமாற்ற சமாதான நாடகம்! உள்நாட்டில் செய்வதோ இராணுவப் படுகொலை!

∴ ஒன்றும் வழங்காமலே தமிழரை ஒழித்துக் கட்டுவதில் ஒன்றுபடும் சிங்களக் கட்சிகள்!

## இந்தியத் தேர்தல் முடிவதற்குள் ஈழத்தை அழிக்க

# சிங்கள ராணுவம் சதி

**இந்தியாவில் தேர்தல் நடக்கையிலேயே, புதிய அரசங்கம் ஏற்படுவதற்கு முன்பாகவே யாழ்குடா நாட்டைத் தாக்கி, தமிழ் மக்களை அங்கிருந்து வெளியேறும் படி செய்ய அல்லது கொன்றொழிக்க சிங்கள ராணுவம் திட்டமிட்ட படையெடுப்பில் ஈடுபட்டுள்ளது. உலக நாடுகளை ஏமாற்ற சமாதான நாடகம் போடும் சந்திரிகா, உள்நாட்டில் ராணுவ வெற்றியையே நம்பி அதை முடுக்கி விட்டுள்ளார். எனவே, தேர்தல் முடிவுவரை பொறுத்திருக்காமல் இந்தியா உடனே தலையிட்டு அதைத் தடுத்து நிறுத்த வேண்டும்என்று இலங்கைத் தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். தமிழகத் தலைவர்களும் கட்சிகளும் அதற்காகக் குரல் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதன் விவரம் வருமாறு:**

ஒரு லட்சம் பேருக்கும் அதிகமான தொகை கொண்ட சிங்கள ராணுவம், கடல்படை, விமானப்படைகளின் துணையுடன் யாழ்குடா நாட்டின் மீது தாக்குதல் தொடுக்கத் தொடங்கியுள்ளது.

யாழ்ப்பாண நகரிலிருந்து ஆறு லட்சம் தமிழ் மக்களை அடித்துக் கலைத்ததைப்போல வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளிலிருந்தும் தமிழ் மக்களை அடித்துக் கலைக்க, கொன்று குவிக்க சிங்கள ராணுவம் தலைப்பட்டுள்ளது.

### ராணுவ மந்திரி ரத்வத்த

குடியரசுத் தலைவர் சந்திரிகாவின் தாய்மாமனும், பிரதமர் சிறீமா பண்டாரநாயகாவின் சகோதரருமான ராணுவ மந்திரிஜெனரல் ரத்வத்ததமிழ் மக்களைக் கொன்று குவித்து, தமிழ்ப்பகுதிகளைச் சிங்கள மயமாக்குவதன் மூலமே இனப் பிரச்சினையை இல்லாமல் செய்து விடலாம் என்று திட்டமிட்டுச் செயல்படுவதாகத் தெரிகிறது.

ஏனெனில், இனப் பிரச்சினைதீர்வுக்கான(ஈழத்திற்கு) மாற்று திட்டம் என்ற பெயரில் சந்திரிகா வெளியிட்ட அதிகாரப் பரவல் திட்டம் அனைத்துச் சிங்களக் கட்சிகளாலும் நிராகரிக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது.

சந்திரிகாவே அது அப்படி நிராகரிக்கப்பட வேண்டும், அதே நேரத்தில் இடைக் காலத்தில் உலகத்தை ஏமாற்ற அது பயன்படும் என்று எண்ணியே அதை வெளியிட்டதாகக் கூறப் படுகிறது.

### அதிகாரப் பரவல் திட்டம்

உண்மையாகவே அவர் இனப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று கருதியிருந்தால், பதவிக்கு வந்த தொடக்கத்திலோ, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த போதோ அத்திட்டத்தை வெளியிட்டு ஆதரவு கோரியிருப்பார்; அப்படி அப்போதே வெளியிடப்பட்டிருந்தால், அன்றிருந்த சூழ்நிலையில், பெரிய அளவுக்கு எதிர்ப்பில்லாமல் அது நிறைவேறியுமிருக்கும் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்

### காலம் தவறி அரங்கேறிய நாடகம்

விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைமுறிந்த பிறகு திருமதி சந்திரிகா குமாரதுங்க அதிகாரப் பரவலாக்கத் திட்டத்தை வெளியிட்டதற்குக் காரணம் 1) புலிகள் சமாதானத் தீர்வுக்குத் தயாராக இல்லை என்று உலகத்திற்குத் தேரிவித்து, அவர்களை ஒடுக்குகிறோம் என்ற போர்வையில் தமிழ் மக்களைத் தாராளமாகக் கொன்று குவிக்கலாம், 2) ஏற்கனவே இனப் பிரச்சினைத் தீர்வுக்கான வழியில் 1987ல் உருவான இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை உலகத்தின் கவனத்திற்கு வராமல் மறைப்பது ஆகிய இரு நோக்கங்களை ஒரே நேரத்தில் செயல்படுத்துவதற்காகத்தான் என்று கூறப்படுகிறது.

ஆம்; திருமதி சந்திரிகா குமாரதுங்க மனப்பூர்வமாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண எணணியிருந்தால், அதற்காகவேஉருவாக்கப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை முன் மாதிரியாகக் கொண்டு அதிலிருந்து முன்னேறிச் செல்லப் பேச்சுவார்த்தையைப் பயன்படுத்திக் கொண்டிருப்பார்.

### இணைந்த தமிழ் மாகாணம்

ஏனெனில், வடக்கும் கிழக்கும் தமிழ் மக்களின் பாரம்பரியத் தாயகம்; அவ்விரு பகுதிகளும் இணைந்த தமிழ் மாகாணம் உருவாக்கப் படவேண்டும் என்று அவ்வொப்பந்தம் தெளிவாகச் சொல்லியிருப்பதுடன், அதனடிப்படையில் ஏற்பட்ட தமிழ் மாகாணம் நடைமுறைக்கும் வரத் தொடங்கியிருந்தது. அவ்விரு மாநிலங்களிலும் கருத்துக் கணிப்பு நடத்தி அதை நிரந்தரப்படுத்துவது ஒன்றுதான் பாக்கியாக இருந்தது.

இந்தியாவின் தலையீடு ஈழத்தைப் பெற்றுக் கொடுப்பதாக இருக்க வேண்டும் என்று, ஈழத் தமிழ் மக்கள் எதிர்பார்த்தது நடக்க வில்லையென்றாலும், இலங்கையைப் பிரிவினை செய்யாமல் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்போர்க்கு அவ்

(11-ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தாயே! உடன் எழுவாயே!

**தமிழீழதாசன்**

இந்தியத் தாயே! இந்தியத் தாயே!
இலங்கையில் உனது பாராமுகம் சரியோ?
சிந்தையில் நினைவில் உன்னையே நம்பும்
செந்தமிழ் இனத்தார் அழிவது முறையோ?

எந்தத் துறையிலும் உத்தனுக் கெதிராய்
சிறீலங்கா இருந்ததை மறந்திட லாமா?
அந்தக் காலங்களில் உன்நேச சக்தி
அங்கே தமிழரே! மறந்திடப் போமா?

துப்பாக்கி முனையில் சிங்கள ராணுவம்
சோதர மக்களைக் கொல்வது தகுமோ?
முப்படை யாலும் முற்றுகை யிட்டு
முழுஇனப் படுகொலை புரிவது அறமோ?

பரம்பரைத் தாயகப் பகுதியி லிருந்து
பச்சைத் தமிழரை அகற்றுதல் முறையோ?
வரம்மின்றிச் சிங்களப் பௌத்தரைக் குடியேற்றி
வடக்கையும் கிழக்கையும் விழுங்குதல் சரியோ?

இந்திய—இலங்கை ஒப்பந்தம் பொய்யா?
இன்றதைச் சிறீலங்கா மீறுதல் சரியா?
தந்திரமாக உலகை ஏமாற்ற
சமாதான நாடகம் நடத்துதல் முறையா?

இப்போதே தலையிட்டுன் புதல்வரைக் காப்பாய்
ஈழம் சிதையாது இனச்சிக்கல் தீர்ப்பாய்
ஒப்பாத சிங்களப் பேரின வாத
ஊழிக் கூத்தை உடன்நிற்க வைப்பாய்!

தப்பேதும் செய்யினும் தாய்தள்ளல் நீதியோ?
தமிழீழ மக்கள் வேண்டாத சாதியோ?
எப்போதும் கண்ணீர்தான் எம்மினச் சொத்தா?
எங்களின் செந்நீரே சிங்களர் வித்தா?

ஒப்போலைத் திருவிழா உன்நாட்டில் இன்று
உதிரம் குடிக்கிறார் யாழ்குடா சென்று
அப்பகை வெல்ல இடம்தர லாமா?
அன்னையே பிள்ளையைக் கைவிட லாமா?

இந்தியத் தாயே! தமிழகத் தாயே!
இனவெறிச் சிறீலங்கா சதியினை முறிக்கச்
சிந்தைகொள்! செயல்படு! தமிழரைக் காத்திடு!
தேர்தல் வரும்போகும்! கடமைசெய் வாயே!

**ஈழத் தேசிய இனத்தின் உரிமைக்குரல்**

படிப்பகம்

www.padippakam.com

''நட்டார் எனப்படுவார் நாடுங்கால் வையத்துப்
பட்டாம் பலபிறப்புத் துன்பமென்று-ஒட்டி
அறநெறி கைவிடாது ஆசாரம் காட்டிப்
பிறநெறி போக்கிற் பவர்'' —அறநெறிச்சாரம்

(ஆராய்ந்து பார்க்குமிடத்து, நண்பர் என்று சொல்வதற்கு உரியோர், 'இந்த உலகத்தில் பல்வேறு துன்பமடைந்தோம்' என்று அல்லல்படுவோர்க்கு ஆதரவளித்து, அறநெறியில் நின்று, பொது ஒழுங்கை எடுத்துக்காட்டி, அவர்களைத் தீநெறியிலிருந்து நீக்குபவரே ஆவர்.)

# தெளிவு

## இஸ்ரேலும் சிறீலங்காவும்

தெற்கு லெபனான் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் தாக்குதலையும், இஸ்ரேலிய விமானங்கள் குண்டுமாரி பொழிந்து அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதையும் உலக நாடுகள் ஒன்று விடாமல் கண்டித்திருக்கின்றன. இந்தியா வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

அமெரிக்காவின் வெளியுறவு அமைச்சர், பிரஞ்சு நாட்டின் வெளியுறவு அமைச்சர், ஐரோப்பியப் பாராளு மன்றத்தின் உயரதிகாரி எனப் பல்வேறு நாடுகளின் அரசுப் பிரதிநிதிகள் எல்லாம் இஸ்ரேலுக்கு விரைந்து, தாக்குதலை உடனே நிறுத்துமாறு அந்நாட்டுப் பிரதமரை நேரிலேயே கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இத்தனைக்கும் லெபனான் ஒரு தனிநாடு. அதற்கென்று அரசும், முப்படைகளும் இருக்கின்றன. அது ஒரு அரபு நாடு என்பதால், அதற்குப் பின்னால் 20க்கும் மேற்பட்ட அரபுநாடுகள் ஆதரவாக இருக்கின்றன. அவை ஒருங்கு திரண்டால் இஸ்ரேலுக்குப் பதிலடி கொடுக்கவும் முடியும்.

இஸ்ரேலோ, தான் லெபனான் மீது தாக்குதல் தொடுப்பதற்கு அங்கிருந்து கொண்டுதான் ஈரானின் ஆதரவு அமைப்பான ஹிஸ்புல்லா கொரில்லாக்கள் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துவதாகவும், அவர்களை ஒடுக்குவதற்காகவே தான் அந்த நடவடிக்கையை மேற்கொள்வதாகவும் நியாயம் கூறுகிறது.

இருப்பினும் உலகநாடுகள் எல்லாம் இஸ்ரேலைக் கண்டிக்கத் தவறவில்லை.

இலங்கையிலோ, சிங்களப் பேரினவாத அரசாங்கம் தமிழ்ப்பகுதிகள் மீது இஸ்ரேலைவிட மோசமாகத் தாக்குதல் நடத்தி, விமானங்கள் மூலம் குண்டுமாரி பொழிந்து, அப்பாவித் தமிழ்ப் பொது மக்களை மொத்த மொத்தமாகக் கொன்று குவித்தும், இடம் பெயரச் செய்தும் ஏனென்று கேட்பாரில்லை.

லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதற்கும், தமிழீழப் பகுதி மீது சிறீலங்கா தாக்குதல் நடத்துவதற்கும் என்ன வேற்றுமை?

சொல்லப்போனால் எல்லைக்கு வெளியே இருந்து அத்துமீறி வரும் தாக்குதலை முறியடிக்கவே தான் அந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக இஸ்ரேல் கூறிக் கொள்வதில் வாதத்திற்காவது சிறிது நியாயம் இருப்பதாய்ச் சொல்லலாம்; இலங்கையிலோ தமிழ் மக்களும் தனது குடிகளே என்று சிறீலங்கா அரசு கூறிக்கொள்கிறது. தமிழீழப் பகுதி தனது பிரிக்க முடியாத பகுதி என்றும் சொல்லிக் கொள்கிறது. அப்படியானால் அப்பகுதி மீது தாக்குதல் நடத்தி, அம்மக்கள் மீது குண்டுமாரி பொழிவது என்ன நியாயம்?

உள்ளபடி அம்மக்களைக் கொன்று முடித்து, அப் பகுதியையும் சிங்களமயமாக்கச் செய்யப்படும் பச்சை இனவாத நடவடிக்கைதானே இது?

இந்தப் பாசிச நடவடிக்கையை எந்தக் காரணத்தைக் கூறியும் நியாயப்படுத்த முடியாதே! விடுதலைப் புலிகளை ஒடுக்குகிறோம் என்று சொன்னாலும் அவர்கள் கூட அந்நியரில்லையே! சொல்லப் போனால் அவர்களைப் பயன் படுத்தித்தானே இந்திய அமைதிப்படையை வெளியேற்றியது சிறீலங்கா?

அப்படியிருக்க அவர்களை ஒடுக்குகிறோம் என்ற பெயரில் தமிழ் மக்களை அழிக்க முற்படுவது என்ன நியாயம்?

இஸ்ரேலின் குண்டு வீச்சைக் கண்டிக்கும் உலக நாடுகள், சிறீலங்காவின் குண்டு வீச்சைக் கண்டிக்காமல் இருப்பதேன்?

தங்களைக் காத்துக்கொள்ளக்கூடிய சொந்த அரசும், சுற்றுச் சார்பும் உள்ள லெபனான் விடயத்தில் கரிசனை காட்டும் உலக நாடுகள், அந்த வசதியற்ற ஈழத்தமிழ் மக்கள் விடயத்தில் பாராமுகமாக இருப்பது தர்மமல்ல.

குறைந்தபட்சம் உலகத்தின் மாபெரும் ஜனநாயக நாடாகிய இந்தியாவேனும் இதைக் கண்டிக்க, தடுத்து நிறுத்த உடனடியாக முன்வர வேண்டியது அவசியமாகும்.

# கலைஞரின் கலையுலகப் பொன் விழாவிற்கு ஈ.ஏ.ம.க. தலைவர் வாழ்த்து

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம். தங்களின் ஐம்பதாண்டுக்காலத் திரையுலகச் சேவையைப் பாராட்டி தமிழகத் திரையுலகமே திரண்டு 14/4/96 அன்று எடுத்த பிரமாண்டமான விழாவைக்கண்டு உலகத் தமிழினமே உவகைக் கடலில் நீந்துகின்றது.

இன்று எமது தமிழ்கூறு நல்லுலகத்தில் அறுபதாண்டுக்கும் மேற்பட்ட பொது வாழ்க்கை அனுபவம் கொண்ட மூத்த தலைவராகச் சகலதுறைகளிலும் ஆற்றல் மிக்கவராகத் தாங்களே திகழ்கிறீர்கள்.

எழுத்தாற்றல்

பேச்சாற்றல்

நிர்வாகத்திறமை

முதலிய எவற்றிலும் இன்று தங்களை மிகைப்பவர் எவருமில்லை.

அரசியலானாலும்

கலைத்துறையானாலும்

இலக்கியத்துறையாயினும் தொட்டதனைத்திலும் பிறர் எட்டமுடியாத இமயமாகத் தாங்கள் மிளிர்கிறீர்கள்.

அத்துடன் மட்டுமின்றி, இன்று தமிழ் கூறு நல்லுலகில் பல்வேறு துறையினரையும், பல்வேறு வகைப்பட்டவர்களையும்-சாமான்யத் தொண்டர் முதல் தலையாய இடத்தில் இருக்கிறவர்கள் வரை நினைவில் பதித்துகொண்டு, பெயர் சொல்லி விளிக்கின்ற பேராற்றல் மிக்கவராகத் தாங்களே விளங்குகின்றீர்கள்.

அத்தகைய உங்கள்காலத்தில் வாழுகின்ற வாய்ப்புக் கிடைத்ததே எம்போன்றவர்கட்குப் பெரும் பேறாகும்.

உங்கள் தலைமையில் ஒளிமயமான ஓர் பொற்காலம் உலகத்தமிழினத்திற்குஅமைய வேண்டும் என்பதே அனைத்துத் தமிழ்மக்களின் எதிர்பார்ப்பாகும். அதிலும் தங்களால் ''இக்காலப் புறநானூற்றுத் தமிழர்கள்'' என்று புகழ்ப்படும் ஈழத்தமிழினத்தின் இருட்காலம் நீங்கவேண்டும்-நீங்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

வரலாறு படைக்கும் வரலாற்று நாயகரான தங்கட்கு இச்சந்தர்ப்பத்தில் எம் சார்பிலும், ஈழத்தமிழினத்தின் சார்பிலும் வணக்கத்தையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

சங்கத் தமிழ்தந்த தமிழ்க் கங்கையே உங்கள் புகழ் எங்கும் பரவுக!

குன்றாப் பொதுவாழ்வின் புகழ் மன்றமே உங்கள் பொன் றாப்புகழ் புதிய தமிழ் உலகை உருவாக்கி மலரட்டும்!

இவ்வாறுஈழத்தமிழர்பாதுகாப்புக்கழகத்தலைவர் சா.செ. சந்திரகாசன், கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

# வறுத்த கோழியின் பெருமை

அமெரிக்காவின் பன்னாட்டு கம்பெனியில் பெப்சி கோலா, கொக்கோ கோலா சுரண்ட வந்ததைப் போன்று அதன் அடுத்த வரிசையில் அமெரிக்காவின் பெப்சிகோ கம்பெனியின் கே.எப்.சி.என்ற கென்டக்கி ஃபிரைடு சிக்கன் என்னும் வறுத்த கோழியும் சேர்ந்து விட்டது.

''விரைவுச்'' சாப்பாடு என்ற தெருவோரக் கடையின் மற்றொரு வகையான கேஎப்சி உணவுக்கு ஏங்கிய கும்பலை ஊக்குவிக்க வந்தது தான் அமெரிக்காவின் பன்னாட்டு கம்பெனியின் வறுத்த கோழி.

சரி, இந்த கே.எப்.சி. கோழியில் என்னதான் இருக்கிறது என்று இந்திய வர்த்தக மையத்தின் கீழ் அமைந்துள்ள உணவுஆய்வுமையம் இதனை, நன்கு ஆய்வு செய்தது. இந்திய உணவு கலப்பட தடுப்புச்சட்டம் விதித்திருக்கும் அளவான 1% மோனோ சோடியம் டைக்ளுடாமைட் என்ற இரசாயனம் இதில் 1.37% அளவில் சேர்க்கப்பட்டுள்ளது என்ற உண்மையைக் கண்டறிந்தது. இதனை உண்பதால் வயிறு எரிச்சல், மார்பு வலி ஆகிய நோய்களை சந்திக்கலாம். 4 கிராம் அளவு உட்கொண்டாலே உடலுக்குக் கெடுதல் விளைவிக்கும் என்ற நிலையில் கே.எப்.சி. தயாரிப்பில் ஒரு கிலோ உணவிலேயே 13.7 (1.37%) கிராம் அடங்கிள்ளது என்றும் இந்த ஆய்வு விளக்குகிறது. இந்தக்கோழிக் கதை பற்றி இந்திய மருத்துவ இயல் நிறுவனத்தின் பேராசிரியர் டோக்ரா கூறும் போது 137% அளவு மோனோ சோடியம் க்ளுடாமேட் சுவையை அதிகப்படுத்துவதற்காகசேர்க்கப்பட்ட சீன உணவுகள் நமது உடலில் மந்தத்தன்மையை ஏற்படுத்துவது போல, இதுவும் மந்தப்போக்கை அதிகப்படுத்துகிறது என்கிறார்.

உலகில் இந்தியா உள்பட 8 நாடுகளில் இது வரை 9500 கடைகளை நடத்தி வருவதாக மார்தட்டிவந்த கே.எப்.சி.யை இந்தியாவை விட்டுத் துரத்த வந்தார்கள் கர்நாடக விவசாய இயக்கத்தினரும், மேனகா காந்தியும்.

பெங்களூரில் ஆங்காங்கே முளைத்த கடைகளை அதில் உள்ள உண்மைகளை விளக்கி மக்களை திரட்டி கடைக்குமுன் ஆர்ப்பாட்டம் செய்து அங்கு இறுதியில் கடையைஉடைத்து துரத்தினார்கள். பெங்களூர் உயர்நீதி மன்றத்தின் தடை நீக்க உத்தரவின்பேரில் தற்போது கடை ஓடிக்கொண்டிருக்கிறது.

இதே போல் டில்லியில் சில கடைகளை மூட மேனகா காந்தி எடுத்த போர்க்கொடியின் காரணமாக விழித்துக் கொண்ட அரசாங்கம் சுகாதாரக் கேடு விளைவிக்கும் வகையில் நடத்தப்படுகிறது. (இரண்டு செத்த ஈக்கள் கூட இருந்ததாம்) என்ற குற்றத்தின் பேரில் கடையை மூடும்படி தில்லி நகராட்சி உத்தரவிட்டுள்ளது.

'புதிய கல்வி'

## வடமராட்சி தென்மராட்சியில் ரஷ்யத் தயாரிப்பு விமான மூலம்

### சிறீலங்கா குண்டு வீச்சு!

தென்மராச்சி வடமராட்சி பகுதியில் விமானக் குண்டுத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளதாக வவுனியாவுக்கு கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்ற விமானத்தாக்குதல்களால் பல வீடுகள் எரிந்து நாசமடைந்துள்ளன. காலை 9.15 மணியளவில் ரஷ்யத் தாயாரிப்பு விமானங்கள் குண்டுத்தாக்குதல் நடத்தியதாக அங்கிருந்துகிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

இதே சமயம் தென்மராட்சியில் சாவகச் சேரிப் பகுதியில் அதிகாலை 3.15 மணிக்கு பரவலான ஷெல் வீச்சு பலாலிப் பகுதியிலிருந்து இடம் பெற்றது. இதனால் சாவகச்சேரி மகளிர் கல்லூரி சேதமடைந்துள்ளது.

அத்துடன் யாழ்ப்பான கல்விப்பனியகத்துக்குச் சொந்தமான ஆட்டோ வாகனமொன்றும் ஷெல் வீச்சால் சேதமடைந்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



# ஓசோன் படலத்தை காப்பாற்ற முடியுமா?

ஐக்கிய நாடுகளின் பொதுக் குழுவினால் கடந்த செப்டம்பர் 16ம் தேதி ஓசோன் மண்டலப் பாதுகாப்புத்தினமாக அறிவிக்கப்பட்ட விசயம் இந்தியாவில் இலட்சத்தில் ஒரு ஆளுக்கு கூட தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்பது நிதர்சனமான உண்மை. அதுசரி; ஏன் அந்த குறிப்பிட்ட நாளை ஓசோன் மண்டலப் பாதுகாப்புத் தினமாக அறிவிக்கப்பட்டது? அதற்கு விடை தெரிந்து கொள்ளும் முன்பு அந்த ஓசோன் மண்டலம் எங்கு உள்ளது? இதனால் பயன் என்ன? என்று அறிய விருப்புவர்களுக்கு சுருக்கமானதொரு விளக்கம்?

அதாவது நமது பூமியின் மேற்பரப்பில் வாயு மண்டலத்தில் கடல் மட்டத்திலிருந்துமேலே 20கி.மீ.க்கும் 25 கி.மீ.க்கும் இடைப்பட்ட ஸ்ரோட்டோஸ்பியர் மண்டலத்தில் மெல்லிய படலமாக இந்த ஓசோன் வாயு பரவியுள்ளது. இந்த ஓசோன் மண்டலம் அப்படியே ஒரு நிழற்குடையாக பூமியை ஒரு போர்வை போல் போர்த்திக் கொண்டுள்ளது. துருவப் பிரதேசங்களில் அடர்த்தி குறைந்தும், பூமத்திய ரேகைப் பகுதியின் மேற்பரப்பில் அடர்த்தி அதிகமாகவும் வியாபித்துள்ளது இந்த படலம் சூரியனிடமிருந்து வரும் ஒளியிலிருந்து, பூமியில் வாழும் உயிரினங்களை பாதிக்கும் வகையில் வரும் புறஊதாக் கதிர்களை அப்படியே தடுத்து, திருப்பி விண்வெளிக்கே அனுப்பி விடுகிறது. இப்படி ஒரு மகத்தான பணியை செய்து வரும் ஓசோன் மண்டலம், தற்போது மனிதனின் பிற்போக்கான இயற்கைக்கு முரண்பட்ட செயல்களால் கொஞ்சம் கொஞ்சமாக பாதிக்கப்பட்டு வருகிறது. CFC எனப்படும் குளோரோப்ளோரோ கார்பன் வாயு உற்பத்தியில் பெரும் ஆபத்து ஓசோன் மண்டலத்திற்கு ஏற்பட்டுள்ளது. இந்த CFC வாயு குளிர்சாதனப் பெட்டிகளிலும் நுரை ரப்பர் தயாரிக்கும் தொழிற் சாலைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. வாயு மண்டலத்தில் கலக்கப்படும் CFC வாயு மெதுவாக மேலே சென்று அங்கு ஓசோன் மூலக்கூறுடன் இணைந்து ஓசோனை பிரித்து விடுகிறது. தற்போது தென்துருவத்தில் அண்டார்டிக் பனிக்கண்டத்தின் மேற்புரம் ஓசோன் மண்டலத்தில் கிட்டத்தட்ட ஐரோப்பா கண்டத்தின் பரப்பளவிற்கு ஓட்டை விழுந்து விட்டதாக கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஓட்டை வழியாக உள்ளே நுழையும் புறஊதாக் கதிர்கள் மனிதனுக்கு தோல் புற்று நோய் இன்னும் புரிந்துகொள்ள முடியாத நிலையில் பல நோய்கள் உருவாகின்றன.

1987ம் ஆண்டு செப்டம்பர் 16ம் தேதி முதன் முதலில் மாண்ட்ரீல் ஒப்பந்தம் ஓசோன் மண்டலத்தை சிதைக்கும் வாயுக்களுக்கு எதிராக மான்ட்ரேல் நகரத்தில் பல நாடுகளுக்கு இடையே கையெழுத்தானது. இந்த நாளைத்தான் ஓசோனை சிதைக்கும் வாயுக்களுக்கு எதிரான தினமாக அனுசரிக்கப்படுகிறது.

இந்த ஓசோன் மண்டலத்தின் சிதைவிற்கு காரணமாக பெரும்பாலும் வளர்ந்த நாடுகளையே உலக நாடுகள் குற்றம் சாட்டுகின்றன. எதிர்கால உலகின் நிலையை மனதில் கொண்டு வளர்ந்துவரும், மற்றும் ஏழை நாடுகளுக்கு, ஓசோனை சிதைக்கும் வாயுக்களுக்கு மாற்று வாயுக்களை பயன்படுத்தும் தொழில் நுட்பங்களையும் அதற்கு மூலதன உதவிகளையும் தரவேண்டும் சீனா, மலேசியா போன்ற வளர்ந்து வரும் நாடுகள் ஓரளவிற்கு இவ்விதமான உதவிகளை பெற்று வருகிறது. நம்முடைய இந்தியாவிற்கு நிதியுதவி விசயத்தில் கொஞ்சம் துரதிர்ஷ்டம் தான். தற்போதைக்கு இந்தியாவின் தேவை2 பில்லியன் அமெரிக்கன் டாலர்கள். ஆனால் கிடைத்தது என்னவோ 15 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மட்டுமே.

ஐரோப்பா, செர்மனி, ஸ்காண்டிநேவியா போன்ற நாடுகள் ஓசோனை சிதைக்கும் வாயுக்களின் உற்பத்தியை 100% கைவிட்டு விட்டது. ஓசோனை சிதைக்கும் வாயுக்களில் குளோரோப்ளோரோ கார்பனுக்கு அடுத்ததாக தீயணைப்புச் சாதனங்களில் பயன்படுத்தப்படும் ஹேலோன் வாயு பெருமளவு உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில் மட்டுமே ஆண்டு ஒன்றுக்கு 750 மெட்ரிக் டன் ஹேலோன் வாயு உற்பத்தி செய்யப்படுகிறது. ஹேலோனுக்கு மாற்றுப் பொருளாக சில வாயுக்கள் கண்டறியப்பட்டிருந்தாலும் அவற்றின் உற்பத்தி செலவுஹேலோன்வாயுவின் உற்பத்தி செலவை விட 4 அல்லது 5 மடங்கு அதிகமாக ஆகிறது. இது போன்ற நிலைகளில் தான் இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகள் வளர்ந்த நாடுகளை நிதி உதவிக்காகவும், தொழில்நுட்ப உதவிக்காகவும் எதிர்பார்க்க வேண்டியுள்ளது.

ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி உடனடியாக இது போன்ற ஓசோனை சிதைக்கும் வாயுக்களின் உற்பத்தியை, உலகம் முழுவதுமாக, ஒட்டுமொத்தமாக நிறுத்தினாலும் இதுவரை வெளியிடப்பட்ட வாயுக்கள் தொடர்ந்து பெரும் பாதிப்பை உண்டு பண்ணிக் கொண்டு தான் இருக்குமாம். கி. பி. 2050 ஆம் ஆண்டுவாக்கில் தான் மீண்டும் பழைய 1700 ஆம் ஆண்டு இருந்த நிலையை அடையுமாம். மேலும்.

1995ல் ஏற்பட்ட துளை இரு மடங்கு அதிகமாக உள்ளது எனவும் கண்டறியப்பட்டுள்ளது. மான்ட்ரேல் ஒப்பந்தம் மட்டும் கையெழுத்திடாமல் இன்னும் உலக நாடுகள் CFC யின் உற்பத்தியை முழுதும் தொடர்ந்திருந்தால் வட அமெரிக்கா, ஐரோப்பா போன்ற பகுதிகளில் தற்போதுள்ள அளவை விட 35% அதிகம் புறஊதாக்கதிர் வீச்சிற்கு உட்பட்டிருக்கும்.

வருங்கால சந்ததியினரின் நலனை மனதில் கொண்டு உலகின் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மனிதனும் சிந்தித்து CFC ஹேலோன் போன்ற வாயுக்களில் பயன்படுத்தப்படும் குளிர் சாதனப் பெட்டிகள், தீயணைப்புக் கருவிகள் போன்றவற்றை இயன்றவரை தவிர்க்க வேண்டிய கட்டாய நிலை நெருங்கி விட்டது. விழிப்புடன் செயல்பட்டு எதிர்கால உலகை காக்க நமது ஆடம்பரமான

குண்டு வீச்சையடுத்து

# நாச்சிக்குடாவிலிருந்துகுடும்பங்கள் குழுழமுனைக்கு இடம் பெயர்வு

## தேவாலயத்தில் 60 குடும்பங்கள் தஞ்சம்

நாச்சிக்குடா மக்கள் குடியிருப்புக்கள் மீது இராணுவ விமானங்கள் மேற் கொண்ட றொக்கட் குண்டு வீச்சிலும், துப்பாக்கி பிரயோகத்திலும் 60க்கு மேற்பட்டோர்கள் படுகாயமடைந்தனர். இவர்களுள் 57 பேர்களது பெயர் விபரங்கள் வருமாறு:

அன்ரன் சித்திரா 35 வயது, சிங்கநாதன் அன்ரன், 34 வயது, மாணிக்கம் மனோகரன் 15 வயது, ஏ. சசிரேகா 10 வயது, ஏ. செல்வநிதி 34 வயது, ஏ. இமிறோன் 10 வயது, ஏ. சுதர்சன் 21 வயது, ஏ. கந்தசாமி 52 வயது, பொன்னம்மா 43 வயது, நாகராணி 62 வயது, இதயசீலன் 34 வயது, கோன்ஸ் பேனல் 32 வயது, மனோகா 16வயது, விமலதாஸ் 26 வயது, இராசமாலன் 17 வயது, கனகம்மா 65 வயது, சூரியபிரபா 1-1/2 வயது, பிரியா 4 வயது, மதிஜோனி 25 வயது, மேரி யூட்மரியா வயது 28, செபமாலை 65 வயது, பவானி 20 வயது, பரிமளம் 47 வயது, மகிந்தன் ஏழு, யூத் 90 வயது, புஸ்பாஜினி 8 வயது, சரண்யா 8 வயது, வளர்மதி அன்ரனிதாஸ் 30 வயது, இராமையா பத்திசிறி 25 வயது, இந்திரன் அனுசியா மரிய கனிற்ற 20 வயது, கொன்சன் வயது 10, மரியராணி34வயது, மாசில்தா 24 வயது, அன்னைமேரி 37 வயது, அமுதராசு 10 வயது, இராஜ்குமார் 14 வயது, அன்ரனி 34 வயது, செல்வநாயகி 31 வயது, திரேசம்மா 65 வயது, மேரிசிங்கராசா 30 வயது, கொன்சியா 4 வயது, சுப்பையா 76 வயது, டன் 23 வயது, தேவராசா 45 வயது, மதியோகராசா 45 வயது, அரவிந்தன்7வயது, ரசிபாலன் 18 வயது, மேரி கொன்சலா வயது 18, எல்டா 14 வயது, இராசம்மா30 வயது, சேவியர் 30 வயது, பற்றிக் 62 வயது ஆனந்தி 28 வயது, அனிஷ்டா 6 வயது, எமில்டா 4 வயது, செல்வராணி 25 வயது, நாச்சியம்மா 40 வயது.

நாச்சிக்குடாபகுதி மக்கள் குடியிருப்புகள்மீதுவிமானங்கள் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலினை அடுத்து அப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த அறுபது குடும்பங்கள் குமுழமுனைப் பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றில் தஞ்சமடைந்துள்ளன.

மீண்டும் இப்பகுதியில் குண்டுத்தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே இக்குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சம்பவத்தில் இறந்தவர்கள் காயமடைந்தவர்கள் மற்றும் இழப்புக்கள் பற்றிய விபரங்களை திரட்டு முகமாக இரண்டு கிராம அலுவலர்கள் பணிக்கப்பட்டுள்ளதாகவும் இடம் பெயர்ந்து தேவாலயத்தில் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கு சமைக்கப்பட்ட உணவுவழங்குவதற்கான நடவடிக்கையினை தாம் மேற்கொண்டு வருவதாகவும்பூநகரி உதவி அரசாங்க அதிபர் இ. ரவிந்திரன் தெரிவித்தார்.

மேலும் குண்டு வீச்சுக்கு இலக்காகிய பகுதியில் யாழ், குடா நாட்டிலிருந்து இடம் பெயர்ந்து வந்த 1742 குடும்பங்கள் வசித்து வருகின்றன எனவும் இவர்களில் பெரும் பகுதியினர் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுபவர்கள்.

இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் ஐவர்களது சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேற்படி தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி அரசினர் வைத்திய சாலைக்கு எடுத்து வரப்பட்டு அங்கு மரணமான இரு ஆண்களினதும் மூன்று பெண்களினதும் சடலங்களேஇவ்வாறு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கிளி நொச்சி மாவட்ட வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## உழைப்பால் வரும் வாழ்வு!

P. S. அன்ரனி,
கீழப்புதுப்பட்டு

இளைஞனே வறுமை என்னும்
கொடிய நோய் உன்னைத் தாக்கும்போது
அதை அழித்திட உழைப்பு என்னும்
மருந்து இருக்கின்றது என்பதை மறந்து
என் திறமை எதையும் தாங்கிக் கொள்வது
என்று இருக்காதே
இளமையில் உன் உழைப்புக்கு
நேரம் வரும் என்று பொறுத்திருந்தால்
நாளை அந்த எறும்பு கூட உன்னை மதிக்காதே

எவருக்கும் காலம் வரும் என்பது உண்மை
அந்தக் காலத்தை எதிர்பார்த்து
அதற்கு முன் இருக்கும் காலத்தில்
உழைப்பை வெறுத்தால் உன்
வாழ்க்கையில் கிடைக்காது நன்மை
எதிர்காலம் உண்டு என்பதை நம்பு
அதை நம்பி உழைப்பு இன்றி வீதியில்
அலைந்தால் வரும் வீண்வம்பு

## கிளிநொச்சியில் சுப்பர் சோனிக் விமானம் நோட்டம்

கிளிநொச்சி நகரப்பகுதியில் அரை மணித்தியாலத்துக்கு மேலாக சுப்பர்சோனிக் விமானம் ஒன்று வட்டமிட்டு நோட்டமிட்டதாக தெரிகிறது.

விமானம் சீறிப்பாய்ந்து வட்டமடித்ததையடுத்து கிளிநொச்சி நகரப்பகுதி மக்கள் அல்லோல கல்லோலப்பட்டு பதட்டமடைந்து தாக்குதல் எங்கு நடந்தது எனப் புரியாமலும் பீதியடைந்து காணப்பட்டதாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

www.padippakam.com



# நாமும் நமது சூழலும்

S. கிங்ஸ்லி, பரமத்தி

*முன்னுரை:-*

வானும் நிலமும், மதியும் மனிதனும், மரமும் விலங்கும் காற்றும் செடியும், பூவும் பூச்சியும் கரங்கோத்து உலா வந்த இவ்வுலகம் எத்துணை அழகானது! அன்று அதன் வனப்பு? இன்று இதன் சிதைவு? விண்வெளி வீரர் 1968 ஆம் ஆண்டில் விண்கலத்திலிருந்து உலகை எடுத்த நிழற் படம்! அது ஒரு காவியம் காவியம் இன்று மாசுபடுகிறது.

''உன் சிலைகள் உடைகின்றன நீயோ
மோகனப் புன்னகையிலேயே இன்னும்
மூழ்கி யிருக்கிறாய்''

என்ற புதுக்கவிதை வரிகள் சூழல் உலகின் உயிர்ச்சிலைகளாம் அவ்வுயிர்ச் சிலைகள் இன்று சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. உலகம் சிறுமையுற்ற வேளையில் மனிதன் இன்னும் மோகனப் புன்னகையில் மூழ்கியுள்ளான். உலகில் இன்று அச்சுறுத்தும் சூழல் பிரச்சனைகள் பல எழுந்த வண்ணம் உள்ளன. இவை நாடுகளுக்கு நாடு வேறுபடுகின்றன. நமது நாட்டுப் பிரச்சனைகளுக்கு மிகுந்த மக்கட் தொகை, ஏழ்மை நிலை, படிப்பறிவின்மை ஆகியனவே காரணங்கள் எனலாம். இந்நிலையில் நமக்கு சுற்றுச் சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு அவசியமானது.

*உலகை எதிர்நோக்கும் பிரச்சினைகள்:-*

*வளரும் நாடுகள்:-*

வளரும் நாடுகளின் துன்பக் காவியம் நம்மை சோகத்தில் ஆழ்த்துகின்றது. குறிப்பாக ஆசியா, ஆபிரிக்கா, தென் அமெரிக்கா நாட்டு மக்களின் துன்ப துயரம் நாம் அறிவோமா? உலக மக்கட் தொகையில் 4/5 மடங்கு இங்கு வாழ்கின்றனர். ஏழ்மை, பிணி, அறியாமை போன்றவை இவர்களின் பரம்பரை சொத்து. நிலமற்ற விவசாயிகள் இவர்கள். அன்றாட வாழ்வே இவர்களுக்கு ஒருபோராட்டம். உணவு, உடை, எரிபொருள், இவற்றுக்காக காட்டையும் நாட்டையும் அழித்த வண்ணம் இருக்கின்றார்கள். காடழித்த இடங்களில் மண் இழப்பு ஏற்பட்டு அவை பாறைகளாகி விட்டன. அம்மக்கள் நகர் நோக்கிச் சென்ற வண்ணம் உள்ளனர். எனவே பல நகர்களில்குடிசைப் பகுதிகள் பெருகி விட்டன. வளரும் நாடுகளின் சுற்றுச் சூழல் மக்கள் தொகையால் பாதிக்கப்பட்டு வருகின்றன.

*வளர்ச்சி பெற்ற நாடுகள்:-*

வளர்ச்சி பெற்ற நாடுகளின் பிரச்சனைகள் வேறு வகையில் அமைந்துள்ளன. உயிர் மண்டலத்தின் மாசு நிலை இங்குத் தாண்டவமாடுகின்றது. பசுமையக வாயுக்கள் உலகின் வெப்பநிலையை உயர்த்தி விட்டன. ஓசோன் துளைகள் உயிரை அழிக்கவிருக்கின்றன. உலக வெப்பம் மேலிட்ட நிலையில் பனிப்படலங்கள் உருகி வெள்ள அபாயம் மிக அண்மையில் உள்ளது. மழைநீர் அமிலமாகி விட்டது. உயிர் தாங்கும் அமைப்புகளான நிலம், நீர் போன்றவை கழிவுப் பொருட்களின் பெட்டகங்களாக மாறிவிட்டன. நிலமும் மண்ணும் வளம் குன்றி நலிவுற்று விட்டன. வேளாண் நிலங்கள் நகரங்களாக காட்சியளிக்கின்றன. அமெரிக்காவில் மட்டும் ஒவ்வொரு ஆண்டும் ஏறக்குறைய 420,000 ஹெக்டேர் நிலம் இவ்விதம் மாற்றம் பெறுகிறது. வளர்ச்சி பெற்ற நாடுகளின் சுற்றுச் சூழல் அறிவியல் வளர்ச்சியால் பாதிக்கப்படுகிறது.

இந்தச் சூழ்நிலையில் உலகம் உய்ய என்ன செய்யலாம் என்ற கேள்விக்குப் பதிலாக விளங்குவதுதான் உலகச் சூழல் பேணும் திட்டம் எனலாம். பொருளாதார மேம்பாடு இயற்கை நலத்துடன் இணைந்து செயல்படல் மிகவும் அவசியம். இயற்கை வளங்களை திட்டமிட்ட வகையில் பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும். உலக மக்களையும், அரசுகளையும், சூழல் சார் மேம்பாட்டுத் திட்டங்களைக் கையாளத் தூண்டவேண்டும் உண்மையான முன்னேற்றம் சூழல் சார்ந்திருக்க வேண்டுமேயன்றி வேறு முறையில் அமைய சாத்தியமில்லை. சூழல் நலம் ஒவ்வொரு மனிதனின் கவனத்தையும் ஈர்க்கவேண்டும். இது வசதிபடைத்தவரின் பொழுது போக்கன்று.

*சூழல் மாசடையும் வழிகள்:-*

சுற்றுச் சூழல் என்பது மனிதனுக்கும் அவனைச் சுற்றியுள்ள உயிருள்ள, உயிரற்ற பொருட்கள் இவற்றிற்கும் உள்ள தொடர்பாகும். இச்சூழலானது நிலம், நீர், காற்று, அணைகள், காடுகள், வாழிடம், மக்கள் தொகை, அரசியல், சுகாதாரம், உயிரின் அமைப்பு, சக்தி ஆகியவைகளால் மாசுபடுத்தப்படுகின்றன. இவை தானாக மாசுபடுவதில்லை இவற்றை மனிதர்களும், வளர்ந்து வரும அறிவியல் வளர்ச்சிகளும் மாசுபாடு அடையச் செய்கின்றன.

*நிலம்:-*

உலகளவில் நிலமானது நான்கில் ஒரு பங்கு தான் உள்ளது இந்தியாவில் 2½% தான் நிலப்பரப்புள்ளது. நிலமானது மேய்ச்சல் நிலம், விளை நிலம், காடுகள், தரிசு நிலம் எனப் பிரிக்கப்பட்டுள்ளது. மேய்ச்சல் நிலங்கள் நிரந்தரமாக இல்லை விளை நிலங்கள் இந்தியாவில் 14 கோடி ஹெக்டேர் பரப்பளவில் உள்ளது. இந்த விளை நிலத்தால் 13 கோடி டன் உணவு உற்பத்திதான் உள்ளது. இது தற்போதைய அளவில் போதியதாக இல்லை. காடுகள் உலகளவில் 60% உள்ளது. வளமான நாடுகளில் 33% உள்ளது. ஆனால் இந்தியாவின் காடானது 15% தான் உள்ளது. இக்காடுகளும் தற்போது அழிந்து கொண்டிருக்கின்றன.

மேய்ச்சல் நிலம் போதியளவு இல்லாததால் கால்நடைகளுக்கு போதிய தீவனமின்மை காரணமாக, பெருகிவரும் கால் நடைகள் குறுகி வரும் விளைநிலத்துக்கு முக்கிய காரணமாகும். மேலும் மகசூல் அதிகரிப்பதற்காக பயன்படுத்தும் செயற்கை உரங்களும், பூச்சி கொல்லி மருந்துகளும், நிலத்தை வளம் குன்றச் செய்கிறது. பயிரிடுவதாலும் நிலமானது வளமற்ற நிலமாக மாறுகிறது சில நிலங்களில் ஒரு நிலைத் தாவரங்களான (Mono Caltura Plants) யூகலிப்ட்ஸ், அகேசியா, தீக்குச்சிமரம், மலைச்சவுக்கு போன்றவை வளர்ப்பதால் மண் அமிலத் தன்மை பெற்று விடுகிறது. அதனால் மற்ற தாவரங்கள் வளர அந்நிலமானது ஏற்றதாக அமையவில்லை.

தொழிற்சாலைகள், வீடுகட்டல், விவசாயம், விறகு போன்றவற்றிற்காக காடுகள் அழிக்கப்பட்டு வருவதால் நாட்டில் மழை குறைகிறது குப்பை கூளங்களாலும் தொழிற்சாலைகளின் திட கழிவுப் பொருட்களாலும் நகரப் பகுதிகள் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து நோய் பரப்பும் பூச்சிகள் நீருடன் சேர்ந்து நொதித்தலின் காரணமாக பல கெட்ட வாயுக்கள் மூலம் சூழல் மாசடைகிறது.

மனிதனின் வாழ்க்கை காரணங்களுக்காக அவன் நிலத்தை மாசடையச் செய்து விடுகிறான். நிலம் மாசுபட்டால் நீர் மாசுபடும். அதனால் மனிதன், கால் நடைகள் பலதரப்பட்ட வழிகளில் பாதிக்கப்படுகிறது. வெள்ளத்தினாலும், புயல் காற்றினாலும் மண்ணானது அடித்துச் செல்லப்படுவதால் நிலப்பரப்பிலுள்ள வளமான மண் குறைகிறது.

*மாசடைவதை தவிர்க்க:-*

ஒவ்வொருவரும் தங்கள் கால் நடைகளுக்கேற்ப மேய்ச்சல் நிலங்களை வளர்த்தல் வேண்டும். இயற்கை உரங்களை (சாணம், குப்பை கூளங்கள்) விளைநிலங்களுக்கு உபயோகித்தல் பயிர் சுழற்சி முறையினைக் கையாள்வதன் மூலமாகவும், தேவைக்காக காடுகளை வெட்டினாலும், அதற்கு பதிலாக இன்னொரு காட்டை உருவாக்குபவர் இருத்தல் வேண்டும். வெள்ளத்தால் நிலமானது (விளை நிலங்கள்) பாதிக்கப்படாமல் இருக்க படிமுறைகளில் பயிர் செய்தல் மூலமாகவும், மரங்களை நடுவதன் மூலமாகவும் மண் அரிமானத்தை தடுத்து நமது நிலத்தை வளமுடன் பாதுகாப்போம்.

*நீர்:-*

''நீரின்றி அமையாது இவ்வுலகு'' உலகளவில் நீர்ப் பரப்பானது. 3/4 பங்குள்ளது. இந்நீரில் கடல்நீர் 97%, பனிக்கட்டி 2% தூய்மையான குடிநீர் 1% உள்ளது. இந்த தூய நீரில் நமக்கு குடிப்பதற்கு கிடைக்கும் நீர் தூய்மையாக இருப்பதென்பது மிக அரிது நீர் நமக்கு இயற்கையளித்துள்ள ஓர் இன்றியமையாத சொத்து. நீர் நிலைகள் பல இன்று கழிவுநீர்க்குட்டைகளாக உருமாறியுள்ளன. இந்தியாவின் புனித நதியான கங்கையிலேயே ஒரு வருடத்திற்கு 12000 சடலங்கள் மிதக்கின்றன. உலகில் நாள் ஒன்றுக்கு 10 கோடி மக்கள் நீரால் ஏற்படும் நோயால் அவதியுறுகின்றனர்.

''வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயர குடி உயரும்
குடி உயர கோன் உயர்வான்''

என்பதை நினைவுபடுத்தும்போது வரப்புயரத் தேவைப்படும் நீரானது கோனையே உயர்த்திக் காட்டிவிடும். ஆனால் நீரானது தற்போது பல வழிகளில் மாசுபட்டுள்ளதால் மாசுள்ள நீர்கள் பாசனத்தில் செல்வதால் வரப்பும் உயராது நாமும் உயரமாட்டோம்.

நீரானது பல வழிகளில் மாசடைகிறது அவை தொழிற்சாலைகளின் கழிவுகள், நகர, கிராம மக்களின் அத்தியாவசியமான தேவைகள், கடைகளின் கழிவுகள், கால் நடைகளின் அதிகபட்ச எண்ணிக்கை, மக்கள் தொகைப் பெருக்கம், அமில மழை, பசுமையக விளைவு (Green house effect) ஆகியவற்றால் நீர் மாசுபடுகிறது.

உலகில் கிட்டத்தட்ட 70,000 இரசாயனப் பொருட்கள் உள்ளன. தொழிற்சாலைகளின் வழியே வெளியேறும் கழிவுகளில் அதிக இரசாயனப் பொருட்கள் உள்ளன. பல

(9-ம் பக்கம் பார்க்க)

## செய்திச் சரம்

20—3—96

நேற்று முன்தினம் மன்னார் மாவட்டத்தில் உள்ள புலிகளின் முக்கிய முகாம் மீது இராணுவத்தினரின் விமானப் படை ஹெலிகப்டர்கள் தாக்கியதில் 30 புலிகள் கொல்லப் பட்டனர் என்று பாதுகாப்புத் துறை அமைச்சகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

(தினகரன்)

ஜோர்டான் நாட்டில் இலங்கை தூதரக அதிகாரியாக இருக்கும் அபு கஜ்ஜில் என்பவர் இலங்கை பெண்களின் குழந்தைகளை ரகசியமாக வெளிநாட்டுக்கு விற்க முயன்ற போது கைதாகியுள்ளார். இதை ஜோர்டான் நாட்டு நீதி அமைச்சர் அப்துல் கரீம் இந்த சம்பவத்தை உறுதி செய்து இருக்கிறார்.

(தினகரன்

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நாச்சிகுடா என்ற இடத்தில் தமிழ் அகதிகள் முகாம் உள்ளது. இம் முகாமின் மீது விமானப்படையினர் ஹெலிகாப்டரில் குண்டு வீசியதில் 16 தமிழ் அகதிகள் கொல்லப்பட்டனர். 60 பேர் காயமடைந்தனர் என்று வீரகேசரி பத்திரிகை உறுதிப்படுத்துகிறது,

(தினகரன், கதிரவன்)

21—3—96

நேற்று அதிகாலை யாழ்ப்பாணப் பகுதியில் ஆராளி முனையில் இராணுவத்துக்கும் புலிகளுக்கும் கடும் சண்டை நடந்ததில் 18 புலிகளும், 7 இராணுவத்தினரும் உயிரிழந்தனர் என்று இராணுவத் தரப்பில் தெரிவித்துள்ளது.

(தினமணி, தினகரன்)

தமிழ் ஈழப் பிரச்சினை தீர அரசியல் தீர்வு காண வேண்டும் என்பது தான் தி.மு.கவின் கருத்து. அதே நேரத்தில் ஈழத் தமிழர்கள் மீது எக்கருத்தையும் திணிக்க தி.மு.க. விரும்பவில்லை என்று தி.மு.க தலைவர் மு. கருணாநிதி நேற்று நிருபர்களுக்கு பேட்டியளித்தார்.

(தினமணி, தினமலர், கதிரவன், இந்து)

22—3—96

மன்னார் மாவட்டத்தில் நாச்சிக்குடா பகுதியில் ஹெலிகப்டர் மூலம் நபாம் குண்டுகளை இராணுவம் வீசியதில் 16 அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர் என்று புலிகள் கூறியுள்ளனர். இக்குற்றச்சாட்டை இராணுவம் மறுத்துள்ளது.

(தினமணி)

கடந்த 16ம் தேதியன்று விமானப்படையினர் தமிழர்கள் மீது நடத்திய கொலைவெறித் தாக்குதல் குறித்து விசாரணை நடத்த உத்தரவிடுமாறு அதிபர் சந்திரிகா குமாரணதுங்கவுக்கு தமிழ் எம். பி. யான ஜோசப்பரராஜசேகரம் கோரிக்கை விடுத்துள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com



# இலங்கை: தமிழர்-சிங்களர் ஒரு வரலாற்றுப் பின்னணி

தொகுப்பு: முனைவர் அரு.கோபாலன்

## 2. இலங்கையின் முதல் பிரிவினைக்குரல் சிங்களவருடையதே

### முப்பெரும் தமிழர்

நவீன வரலாற்றுக் காலத்தை எடுத்துக்கொண்டாலும் இலங்கை முழுவதன் மேம்பாட்டுக்கு உழைத்தவர்கள், அதன் விடுதலைக்குப் பாடுபட்டவர்கள் தமிழர்களாக இருப்பதைமறைக்க முடியாது. ஆனால் சிங்களவர்கள் ஒரே மொழி, ஒரே மதம் என்ற ரீதியில் தங்கள் குடிசனத் தொகையைப் பெருக்கிக் கொண்டு; தங்கள் பேருருவை வளர்த்துக் கொண்டிருக்க' தமிழர்கள் ஈழத் தமிழர் என்றும், இந்திய வம்சாவளித் தமிழர் என்றும், இஸ்லாமியத் தமிழர் என்றும் பிரிந்து தங்கள் பேருருவைச் சிதைத்துக் கொண்டனர் என்பதும் மறுக்க முடியாத உண்மையே.

இதற்குப் பெருகிவந்த சிங்கள இனம் ஐரோப்பிய ஆதிக்கத்தை எதிர்க்காததும், தமிழர்கள் எதிர்த்துப் போராடியதும், பக்கத்தில் தமிழ்நாடு இருக்கின்ற காரணத்தால், தமிழர்களை அந்நியராகக் காட்டிச் சிதைப்பது, ஐரோப்பியரின் ஆதிக்கம் வேரூன்றுவதற்குத் துணை செய்த காரணத்தால், அவர்களே பிரித்தாளும் சூழ்ச்சி மூலம் அதை ஊக்குவித்ததும் அடிப்படையாகும். இதற்கு சிங்களர் செறிந்து வாழ்ந்த பகுதி வளமாக இருந்ததும், தமிழர் செறிந்து வாழ்ந்த பகுதி அதனோடு ஒப்பிட வறட்சியாக இருந்ததும் ஒரு காரணம் எனலாம்.

### தமிழர் நிழலில் வளர்ந்த சிங்களர்

இதனால், வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் வறட்சிக்கு ஆட்பட்ட யாழ்ப்பாணத் தமிழ் மக்கள், சிங்கள மக்கள் போன்று அனைத்து மக்களுக்கும் வேளாண்மைத் தொழிலிலோ, கைத் தொழிலிலோ போதிய வேலைவாய்ப்புகளோ இல்லததால், கல்வியில் கவனம் செலுத்தி, அரசு வேலைவாய்ப்புகளைப் பெறக் கடுமையாக முயற்சித்தார்கள். அதனால் ஏனையப் பகுதி மக்களைவிட யாழ்ப்பாணப் பகுதி மக்கள் கல்வியறிவில் மேம்பட்டனர். கல்வி மேம்பாட்டினால் அரசியல் துறையிலும், அரசின் உயர் பதவிகளிலும் யாழ்ப்பாணத் தமிழர்கள் அதிகமாக இருந்த போதிலும் அவர்கள் ஆதிக்க எண்ணம் கொண்டவர்களாக இருக்கவில்லை மாறாக, அவர்கள் கொண்டிருந்த பரந்த நோக்கையும், பெருந்தன்மையையும் பயன்படுத்திப் பிற்காலத்தில் அவர்கள் நிழலிலேயே சிங்களத் தலைவர்கள் தங்களை நிலைப்படுத்திக் கொண்டதுடன், தமிழர் பெருந்தன்மைக்குப் பரிசாக அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டனர். இதுதான் உண்மையான வரலாறு.

### கண்ணை உறுத்திய தமிழரின் கல்வி மேம்பாடு

வெள்ளையர் ஆட்சியின் கீழ் சிங்கள இனமும், தமிழினமும் அடிமைப்பட்டிருந்த காலத்தில் கல்வியறிவில் மேம்பாடுடையவர்களாயிருந்த காரணத்தினால், சட்டமன்றத்திற்கு வெள்ளைக்கார ஆளுநரால் நியமிக்கப்பட்ட தமிழ் உறுப்பினர்கள்-நிர்வாகப் பதவிகளினால் ஆட்சி மன்றம் வந்த தமிழ் உறுப்பினர்கள், படித்த இலங்கையருக்கான ஒரே இடத்தில் போட்டியிட்டு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரே இலங்கையராக, சட்டமன்றத்திற்கு இரு தடவைகள் வந்த தமிழ் உறுப்பினர் சர். பொன். இராமநாதன்-இவர்கள் எல்லாம் தம் பதவிகளை வைத்து தமிழினத்தை மட்டும் முன்னேற்ற வேண்டும்-சிங்கள மக்களை அடிமை கொள்ள வேண்டும்-முழு நாட்டையும் தமிழனே ஆள வழி செய்ய வேண்டும் என்ற ஆதிக்க உணர்வு சிறிது மற்று, நாட்டில் தமிழ்-சிங்கள மக்கள் சுதந்திரம் பெற்று, சம உரிமையோடு வாழவேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டனரேயன்றி, தாழ்ந்திருந்த சிங்கள இனத்தை மேலும் நசுக்கி, தமது இனத்தை மேனிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்று அவர்கள் முயலவில்லை.

### அருந்தனமகற்றிய பெருந்தன்மை

சிங்களர் எக்கேடு கெட்டும் போகட்டும்; தமிழன் வாழ்ந்த நாட்டை மீளப் பெற்றுத் தனியாக ஆட்சியமைக்க வேண்டும் என்றும் கருதாது, தாழ்ந்த நிலையில் இருந்த சிங்கள மக்களை மேல் நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்ற பெருந்தன்மையோடு செயற்பட்டார்கள்.

ஃ அதனால்தான் 1917-லேயே வெள்ளையரிடமிருந்து சுதந்திரத்தை மீட்க வேண்டும் என்ற எண்ணத்தை சிங்கள-தமிழ் மக்களுக்கு ஊட்டி, அவர்களைத் தட்டி எழுப்பி, ''இலங்கைத் தேசிய காங்கரஸ்'' எனும் அமைப்பை ஏற்படுத்தி, அந்தஇயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்தினார் சர். பொன். அருணாசலம். (இவர் இலங்கை கண்ட முதல் தேசியத் தலைவரான சர். பொன். இராமநாதனின் இளைய சகோதரராவார்.)

ஃ 'ரிச்சர்ட்' என்றும், 'ஜூனியர்' என்றும், 'சாலமன்' என்றும் ஆங்கிலப் பெயர்களைத் தம் பெயர்களுக்குமுன் தாங்கி, சிங்களத்தையே மறந்துவந்த சிங்கள மக்களுக்கு மத்தியில்-குறிப்பாக சிங்களப் படிப்பாளிகளுக்கு மத்தியில் ''சிங்கள மொழியைச் சிங்கள மக்களாகிய நீங்கள் பேசா விட்டால், எழுதா விட்டால் வேறு யார் பேச, எழுதப் போகிறார்கள்?'' என்று கேட்டு தாழ்ந்திருந்த சிங்கள மக்களுக்கு மொழியுணர்வையும், இனவுணர்வையும் ஏற்படுத்தி, அவர்களிடத்தில் தேசிய உணர்வையும் ஒற்றுமையையும் கட்டியெழுப்பியவரே கலாயோகி ஆனந்தக் குமாரசாமி எனும் ஈழத் தமிழரே ஆவார். (இவர் சர். பொன். இராமநாதனின் தாய் மாமன் என்பதும், இவரே இருட்டடிப்புச் செய்யப்பட்ட இலங்கை-இந்தியக் கலாச்சார மேன்மைகளை மேலை உலகத்திற்கு எடுத்துக்காட்டியவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.)

### சிங்கள இனம் காத்த தமிழர் இரட்சகர்

ஃ 1915ல் வெள்ளையர் சூழ்ச்சி செய்து முஸ்லிம் சிங்களவர் இனக் கலவரத்தைத் தூண்டி விட்டு, அதைச் சாக்காக வைத்து, சிங்களத் தலைவர்களையும், மக்களையும் சிறையிலடைத்துத் துன்புறுத்திய வேளையில், முதல் உலகப் போர் மும்முரமாக நடைபெற்ற வேளையில், அச்சு நாடுகளின் கப்பல்களும் நேச நாடுகளின் கப்பல்களும் ஒவ்வொரு கடற் பிராந்தியத்தையும் பீரங்கி வேட்டுக்களமாக மாற்றிக் கொண்டிருந்த நேரத்தில், தம் உயிரைத் துச்சமாக மதித்து, கடல் வழியாக ஆறு மாதம் இங்கிலாந்திற்குப் பயணம் செய்து, அங்கு இலண்டனில் பிரிவு கவுன்சிலில் வாதாடி, சிங்களவரை விடுவித்துக் காப்பாற்றியவர் சர். பொன் இராமநாதன் என்ற ஈழத்தமிழர்தான். அப்படி வெற்றி தேடிக் கொழும்புக்குத் திரும்பிய அத் தமிழர் தலைவரை, ''தம் இனத்தைக் காப்பாற்றிய இரட்சகர்'' என்று போற்றி, தங்கத் தேரில் வைத்து ஊர்வலம் நடத்தியவர்கள் சிங்களத் தலைவர்கள் என்பது வரலாறாகும். ஆம்; அந்தத் தேரை வடம்பிடித்து இழுத்தவர்கள் தான் இலங்கையின் முதலாவது பிரதமரான டி. எஸ். சேனநாயகா, முன்னாள் குடியரசுத் தலைவர் ஜெயவர்த்தனா போன்றவர்கள்.

ஃ வெள்ளையராட்சியின் போதே இலங்கையருக்கு (சிங்களவருக்கும் தமிழருக்கும் சேர்த்து) பல்கலைக்கழகம் வேண்டும் என்று வாதாடிப் போராடி, அதை அமைத்தவரும் சர். பொன். அருணாசலம் என்ற ஈழத் தமிழர்தான்.

### தமிழ் நீரில் சிங்களப் பயிர்

ஆனால், இப்படித் தமிழர்களின் நீர்ப்பாய்ச்சலில் சிங்கள தேசியப் பயிரை வளர்த்துக் கொண்ட சிங்களத் தலைவர்களோ, பின்பு தமிழர்களையே இலங்கைக்கு ஆகாதவர்களாக-அந்நியர்களாகச் சித்தரிக்க முற்படுவதும், அதை உலகம் வேடிக்கை பார்ப்பதும் காலத்தின் கோலம் என்றுதான் சொல்ல வேண்டும்.

''இந்த அளவுக்கு இலங்கையின் ஒன்றுபட்ட தேசியத்தில் ஒன்றியிருந்த தமிழர்கள், பிரிவினை கேட்கலாமா? தனி நாடு கோரிக்கையை எழுப்பலாமா? அதனாலல்லவோ சிங்களவர்கள் தமிழர்களை எதிர்க்கின்றனர்?'' என்று சிலர் கேள்வி எழுப்புகின்றனர்.

### முதலில்பிரிவினைக்குரல் எழுப்பியோர் சிங்களரே

ஆனால், இலங்கையில் முதலில் பிரிவினைக் கோரிக்கையை எழுப்பியவர்களே சிங்களவர்கள்தாம் என்ற வரலாற்று உண்மை மறைக்கப்பட்டு விட்டது என்பதை மறந்துவிடக்கூடாது.

ஆம்; ''சிங்கள மேட்டுக்குடி மக்களும், குறிப்பாக கரையோரச் சிங்களவரும், வடபகுதித் தமிழர்களும் சேர்ந்து கொண்டு இலங்கையை ஆதிக்கம் செலுத்துகிறார்கள். குறிப்பாக மலைநாட்டுச் சிங்களவர்களைச் சுரண்டுகிறார்கள்'' என்று குரல்எழுப்பி, ''எனவே அவர்களிடமிருந்து விடுதலை வேண்டும்; தனிநாடு அல்லது தனி மாநிலம் வேண்டும்'' என்று கோரிக்கை வைத்தவரே இன்றையக் குடியரசுத் தலைவரான சந்திரிகாவின் தந்தையும், தலைமையமைச்சரான சிறிமாவின் கணவருமான சாலமன் பண்டாரநாயகாவும், அவருடைய ஆதரவாளர்களுமான சிங்களவர்களும் தான்'

ஆனால், வெள்ளையராட்சியின் போது சில சுயாட்சி அதிகாரங்கள் வழங்கப்பட்டு, ஏற்கனவே படித்து முன்னேறியவர்கள் என்ற காரணத்தால் இயல்பாக அந்த நிர்வாகப் பொறுப்புக்களில் தமிழர்களும் கரையோரச் சிங்களவர்களும் மிகுந்திருந்த காரணத்தால் எழுப்பப்பட்ட அந்த முழக்கம், இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்து, பெரும்பான்மை மக்கள் என்ற ரீதியில், ஆட்சி மாற்றம் சிங்களவர் கைக்கு வந்த பின்பு மாறுதலடைந்து, தமிழின எதிர்ப்பாக-சிங்களப் பேரினவாதமாக உருப்பெற்றுவிட்டதுதான் நடைமுறை உண்மையாகும்.

(தொடரும்)

# உயர் கல்விக்கும் ஆப்பு?

தமிழ் மக்களின் கல்வியை ஒடுக்கும் நடவடிக்கையின் உச்சகட்டமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கையில் அரசாங்கம் இறங்கியுள்ளது போலத் தோன்றுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் எதுவும் இராணுவக் கட்டுப் பாடற்ற பகுதிகளில் மேற்கொள்ளப் படக்கூடாது என பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் யாழ்ப்பாண பல்கலைக்கழக உபவேந்தருக்கு எழுத்து மூலம் அறிவித்திருக்கின்றார்.

''சூரியக்கதிர்'' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், ஊழியர்கள் அனைவரும் பாதுகாப்புத் தேடி இடம்பெயர்ந்துள்ளதால் பல்கலைக்கழகமும் செயற்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தென்மராட்சியிலும் கிளிநொச்சியிலும் பல்கலைக் கழகத்தின் சில பகுதிகளை இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அரசாங்கம்மேற்கொண்டுள்ள நடவடிக்கை பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டை கேள்விக்குறியாக்கியுள்ளது.

கடந்த ஒரு தசாப்த காலமாக இராணுவக் கட்டுப்பாடு இல்லாத பகுதியில் மிகவும் மெச்சத்தக்க வகையில் செயற்பட்ட இப்பல்கலைக்கழகம், அரசின் புதிய உத்தரவால் பாதிக்கப் படக்கூடிய சூழ்நிலை தோன்றியுள்ளது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு எடுத்துள்ள முடிவு பற்றி அரசு மௌனமாக இருப்பது நல்லதல்ல. இதுவே அரசின் முடிவாக இருந்து யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் எதிர்காலமும் இதுவேயானால் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு உபதலைவராக பேராசிரியர் சி. பத்மநாதன் இருப்பது ''வெறும் பேச்சுக்கு ஒரு தமிழர்'' இங்கும் இருக்கின்றார் என்பதற்கே அது பயன்படும்.

—'வீரகேசரி'

### அரசியல் தீர்வுத்திட்டம்:

# அமைச்சர் பீரிஸ் நம்பிக்கை

பாராளுமன்றத்தில் பிரதிநித்துவம் உள்ள அரசியல் கட்சிகள், ஏனைய எல்லா அரசியல் கட்சிகள் அரசியல் சாசன சீரமைப்பில் அக்கறையுள்ள நிறுவனங்கள், தனியாட்கள் அனைவரிடமிருந்தும் மனுக்களை அரசு பெறும். 40 ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கிய

(8-ம் பக்கம் பார்க்க)

மருத்துவபீட மாணவர்களின்

# கேள்விக்குறி ஆகியுள்ள எதிர்காலம்!

''யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் மருத்துவ உள்ளகப்பயிற்சி நெறிக்கான தகுதிகாண் பட்டியலில் சேர்க்கப்படுவார்களா?'' என்பது தொடர்பாக ''நிச்சயமற்ற ஒரு தன்மை'' தோன்றியுள்ளது. நீண்ட காலமாக ஷெல் அடிகளுக்கும் விமானக்குண்டு வீச்சுக்களுக்கும் மத்தியில் ''குப்பி விளக்கில் படித்த'' மருத்துவபீட மாணவர்கள் அதிர்ச்சியடைந்துள்ளார்கள்.

''சூரியக்கதிர்'' இராணுவ நடவடிக்கை மூலம் ஏற்பட்டுள்ள இடப்பெயர்வைப் பயன்படுத்தி தமிழ் மாணவர்கள் மீது ''பழிவாங்க'' அரசாங்கம் முற்பட்டுள்ளதா என்ற கேள்வியும் கூட இங்கு எழுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த 63 மாணவர்களில் 9 பேர் வவுனியாவிலும், மீதி 54 பேர் சாவகச்சேரியிலும் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள். இறுதிப் பரீட்சைகளைப் பொறுத்த வரையில் மருத்துவ செய்முறைப் பரீட்சைகள் மிகவும் முக்கியமானவையாகும்.

சாவகச்சேரியில் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கான இறுதிப் பரீட்சையை பருத்தித்துறையிலிருந்து தற்போது செயற்படுகின்ற யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஆனால் இதற்கு வேண்டிய மேற்பார்வையாளர்கள் தென்பகுதியிலிருந்தே செல்ல வேண்டியுள்ளது. இதற்கான பயண அனுமதி வழங்கப்படாததுதான் இவ்விடயத்தில் பிரதான தடையாகவுள்ளது. பயணத்துக்கான அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சு ஏற்கனவே ஒரு தடவை நிராகரித்து விட்டதும் கவனிக்கத்தக்கது.

இந்த நிராகரிப்புக்களின் காரணமாக யாழ்ப்பாண மருத்துவ பீட மாணவர்களின் செயல்முறைப் பரீட்சைகளை நடத்த முடியாத நிலை தொடர்கின்றது. அவர்களது பரீட்சைப் பெறுபேறுகளை அறிவிப்பதில் தேவையற்ற தாமதங்கள் இதன் மூலம் ஏற்பட்டுள்ளன.

அரசின் பல்வேறு நடவடிக்கைகளால் ஒடுக்கப்பட்டுள்ள தமிழ் மாணவர்களின் கல்வி இதன்மூலம் மேலும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அரசின் பல்வேறு தடைகளையும், பலத்த போராட்டங்களின் மத்தியில் தாண்டி இறுதி ஆண்டுக்கு வந்து விட்ட மருத்துவ பீட மாணவர்களுக்கு நேர்ந்துள்ள இக்கதி அவர்களை விரக்தியின் விளிம்புக்கே தள்ளிவிடக் கூடியது.

இந்நாட்டின் கல்வி நடவடிக்கைகள் அனைத்தும் பரீட்சைகளை அடிப்படையாகக் கொண்டவையாகவே அமைக்கப்பட்டுள்ளன, பல வருடங்களாகக் கற்ற கல்வியின் பயனை இறுதிப்பரீட்சையின் மூலமாக மட்டுமே மாணவர்கள் பெறமுடியும் என்ற நிலை தோன்றியுள்ளது.

இறுதிப்பரீட்சை இல்லையென்றால் இவ்வளவு காலமும் கற்றதன் நோக்கங்கள் அர்த்தமற்றதாகிப் போய்விடலாம் என்பதை அரசாங்கம் கவனத்திற் கொள்வது அவசியம்.

கல்வித்துறையில் அரசியல் புகுவது எப்போதும் அனர்த்தங்களையே ஏற்படுத்தும்.

—'வீரகேசரி'

## ''ஈழசுதந்திரன்'' மாத இதழ் சந்தா விவரம்

ஓராண்டு சந்தா இந்தியாவில் ரூ. 30-00

வெளிநாடுகளில் அமெரிக்க டொலர் 10

அல்லது பிரிட்டிஷ் பவுண்ட் 6

ஈழ சுதந்திரனுக்கு வெளிநாடுகளில் சந்தாசேர்த்தனுப்ப முன்வருவோர் தொடர்பு கொள்ளலாம் :

நிர்வாகி

''ஈழசுதந்திரன்''

14, சேட் காலனி முதல் தெரு,

மூன்றாம் மாடி.

எழும்பூர், சென்னை-600 008.

# அரசின்ராணுவ நடவடிக்கைக்கு ஆதரவா? பிபிசி.பேட்டியில் கூட்டணிதலைவர் மறுப்பு

ஏற்கனவே ராணுவ நடவடிக்கையால் லட்சக்கணக்கான மக்கள் கடுமையாகப் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். தமது உடமைகள் அனைத்தையும் விட்டுக்கடுமையாகப்பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். மிகவும் வசதியாக வாழ்ந்தவர்கள் கூட வடமாராட்சி, தென்மாராட்சி வந்து வன்னிப்பகுதியிலும் சொல்லமுடியாததுயரங்களை அனுபவிக்கிறார்கள். சாப்பாட்டுக்குக் கூடக்கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில் மேலும் அதிரடி நடவடிக்கை மிகவும் கவலைக்கிடமான விளைகளை ஏற்படுத்தும் என்று நம்புகின்றோம். ஆனபடியினால் இந்த நிலைமைகளை வன்மையாகக் கண்டிக்கும் நிலைமைகளில் உள்ளோம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் துணைத் தலைவர் ஆனந்த சங்கரி பி.பி.சி. நிருபரிடம் கூறியுள்ளார். அந்தப்பேட்டி வருமாறு:

கேள்வி:- வன்மையாகக் கண்டிப்பது இருக்கட்டும்; இது பற்றி நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றீர்கள்?

பதில்:- நாங்கள் எங்களால் எடுக்கக் கூடிய நடவடிக்கை சம்பந்தமாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு எடுத்திருக்கின்றோம். ஜனாதிபதியையும் சந்திக்க இருக்கின்றோம்.

கேள்வி:- முன்பு இப்படிப் பட்ட தாக்குதல்களை நிறுத்துங்கள் என்று அரசுக்கு நீங்கள் விடுத்த வேண்டுகோள்கள் வெற்றியடைய வில்லையே, இனி வெற்றி அடையும் என்று என்ன நம்பிக்கை உங்களுக்கு?

பதில்:- நம்பிக்கை இருப்பதைவிடக் கடமை எங்களுக்கு உள்ளது. முடிந்தவரை என்ன செய்ய வேண்டும் என்ற கடமை எங்களுக்கு, எந்தந்த வகையில் மாற்ற வேண்டுமோ அந்த வகையில் முயற்சி செய்வோம். இதை மீறி இலங்கை அரசு நடவடிக்கை எடுத்தால் நாங்கள் என்ன செய்ய முடியும்?

கேள்வி:- ஏனைய கட்சிகளின் நிலைப்பாடு என்ன?

பதில்:- ஏனைய கட்சிகளின் நிலைப்பாடு சம்பந்தமாக என்னவென்று என்னால் கூற முடியாது. கூடிய வரையில் இதை வரவேற்கமாட்டார்கள் என்றுதான் நான் நம்புகிறேன்.

கேள்வி:- இந்த அரசு இனியும் பெரியதோர் ராணுவ நடவடிக்கை எடுத்தால் தமிழ் பகுதிகளில் தாக்குதல் நடவடிக்கை எடுத்தால்; நீங்கள் தொடர்ந்தும் அரசுக்கு உங்கள் ஆதரவை வழங்கி வருவீர்களா?

பதில்:- நாங்கள் ஆதரவு வழங்கி வருகின்றோம் என் பதில் உண்மை கிடையாது. அது முழுக்க, முழுக்க உண்மைக்குப் புறம்பானது. நாங்கள் சில ஒழுங்குக்கு மாத்திரம் தான் வாக்களிக்கின்றோம். இதுபோன்ற காரியங்களுக்கு நாங்கள் ஆதரவு கொடுப்பது கிடையாது. தமிழர்களுக்கு அங்கு நடக்கும் துன்பங்களுக்கும், கஷ்டங்களுக்கும் என்ன நிவாரணம் கொடுக்க வேண்டும் என்பது பற்றி பேச இருக்கின்றோம்.

# கிழக்கில் ராணுவத்தினருக்கு புலிகள் கொடுக்கும் பதிலடி

### பி. பி. சி. தரும் தகவல்

திருகோணமலைக்கு வடக்கே வழக்கமான நிலக்கண்ணிகளைத் தேடி அழிக்கரோந்துப் பணிகளில் ஈடுபட்டிருந்த ராணுவ வீரர்களுக்கு புலிகள் கடைசியாக நடத்திய தாக்குதல்கள் எதிர்பாராத தாக்குதல்களாக இருந்தன. ரோந்துக் காவலர் குழுவில் பெரும் பகுதி முற்றாகத் துடைக்கப்பட்டு விட்டது. ஒரு சில அதிர்ஷ்டசாலிகள் காயங்களுடன் தப்பினர். புலிப் படைப் போராளிகளும் பலர் கொல்லப்பட்டதாக கூறப்படுகின்றது. கிழக்கில் 45 மணி நேரங்களில் ராணுவத்துக்கு ஏற்பட்ட இரண்டாவது பின்னடைவு இது. சென்ற சனிக்கிழமை கரையோரப் பகுதியில் இன்று கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்புக்குஅருகில் புலிப் படையினர் நடத்திய தாக்குதலில் 40—க்கும் அதிகமான ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். அந்தத் தாக்குதலில் புலிப்படையினர் போராளிகள் 50 பேர் கொல்லப்பட்டதாகப் பாதுகாப்புத் துறை அமைச்சகம் கூறுகின்றது. ஆனால் தமது தரப்பில் மூன்றுபேர் மட்டுமே கொல்லப்பட்டு இருப்பதாகப் புலிப்படை வானொலி ஒப்புக் கொண்டது.

கடந்த சில வாரங்களாக புலிப்படையினர் வடக்கில்

(9-ம் பக்கம் பார்க்க)

# நல்லிணக்கம் நாட்டில் எப்படி ஏற்படும்?

மன்னார் மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பெரு நிலப்பரப்புப் பிரதேசத்துக்கு இவ்வருடத்துக்கான மருந்துப் பொருள்கள் இதுவரையில் எடுத்துச் செல்லப்படவில்லை. இதனால் இப்பிரதேச மருத்துவ சேவைகள் மிகவும் சீர்குலைந்துள்ளது.

அரசாங்கத்தின் பல்வேறு தடைகளால் சீர்குலைந்து போயுள்ள இப்பகுதியில் மருத்துவ சேவைகளும் சீர்குலைந்துள்ளன. நிலைமைகளை மேலும் மோசமடையச் செய்வதாகவே உள்ளது.

மூன்று மாதங்கள் பூர்த்தியடையும் நிலையில்கூட அவசியமான மருந்துப் பொருள்கள் எடுத்து வரப்படாததற்கு சுகாதார அதிகாரிகளின் அசமந்தப் போக்கே காரணம் எனக் கூறப்படுகின்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் பெருநிலப் பரப்புக்கும் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டுத் திரும்பியுள்ளதையடுத்தே இது தொடர்பான விபரங்கள் வெளியாகியுள்ளன. மருந்துத் தட்டுப்பாடு காரணமாக நோயாளர்கள் பெருங்கஷ்டத்துக்குள்ளாகியுள்ளதாக வைத்தியசாலை அதிகாரிகள் அரசாங்க அதிபரிடம் விளக்கியிருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்த அகதிகளில் பெருந் தொகையானவர்கள் மன்னார் பெருநிலப் பகுதிக்கு வந்திருப்பதால், மருந்துகளின் தேவை பல மடங்காக அதிகரித்துள்ளது. இடம் பெயர்வு அகதி வாழ்க்கை, அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாடு போன்றன மக்களை நோயாளிகளாக்கிக் கொண்டிருக்கும் நிலையில் கூட இதனையிட்டு அதிகாரிகள் அக்கறையற்று இருந்திருக்கின்றார்கள்.

நாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள மாணவர்களுக்கு இலவச சீருடைகள் வழங்கப்பட்ட போதிலும், பெருநிலப் பரப்பிலுள்ள மாணவர்களுக்கு இது வழங்கப்படவில்லை. சீருடைத்துணிகளைக் கொண்டு செல்வதற்கு பாதுகாப்புப் பிரிவினர் அனுமதி வழங்கவில்லையாம்.

பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி தமிழர்களைப் புறக்கணிப்பது தொடரும் வரையில் இந்நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என்பதை அரசு உணர வேண்டும்.

www.padippakam.com
படிப்பகம்

# விடியலைக் காட்டிய விடிகாலைக் கனவு...

செல்வி சித்திரா தேவசகாயம்

சிறுகதை

இயற்கை எழில் கொஞ்சும், கோடையிலும் குளுகுளுக்கும் அந்த அழகிய கிராமத்தின் மத்தியில் அமைந்திருந்த ஆலமரத்தடி சிவன் கோயிலின் அதிகாலை மணியோசை சுதந்திராவின் காதுகளில் தேனாகப் பாய, அதற்காகவே காத்திருந்தவள் போல் இதமாகக் கண் விழித்தாள். கோயிலின் சங்கொலி தொடர்ந்தது. சொல்லவும் வேண்டுமா அது மார்கழி மாதம். அன்று திருவெம்பாவை தொடங்கியிருந்தது. அந்த நாட்களில் சுதந்திராவின் சந்தோசத்துக்கு எல்லையுமுண்டோ, அவளுக்குப் பிடித்த மாதமாச்சே அது!

தொடர்ந்து வந்த மாதா கோயில் மணியோசையும், வாங்கொலியும் சுதந்திராவின் உள்ளத்திற்கு மேலும் உவகையூட்ட அந்த உற்சாகத்தில் படுக்கையை விட்டு எழுந்து, நீராட ஆயத்தமாக பின்பக்க வழியாக கிணற்றடிக்குப் போனவள்; கிணற்றடியை வளைத்து நின்ற வேப்ப மரக் குயில்களின் இன் இசை ராகத்திலே நெஞ்சத்தாமரையை நீந்த விட்டபடி மஞ்சள் குளித்து மங்களமாய் நீராடி சீவிமுடித்து பட்டுப்புடவை ஒன்றை பாங்காய் அணிந்து கொண்டு முற்றத்துப் பக்கம் வந்தவள், மார்கழியின் மகிழ்ச்சியில் அங்கு மகிழ்ந்திருந்த துளசி மாடத்தின் சுகந்தத்தில் மனதை கலக்கவிட்டு வாசல் தெளித்து வண்ணக் கோலமிட்டு பார்த்து மகிழ்ந்து...

பின் கையோடு கொண்டு வந்த மலர்த் தட்டை கையில் எடுத்து தோட்டத்துப் பக்கமாய் மலர்கொய்யப் போனவளை முதன் முதலில் முத்துச் சிரிப்போடு மல்லிகை முத்தமிழாய் மணம் பரப்பி வரவேற்க, சொக்கிப் போனவள் அதன் பக்கத்திலே மலர்ந்திருந்த பனியுறங்கிய ரோஜாவின் பவளச் சிரிப்பிலே பரவசமாகி, மலர்ந்தும்மலராமல் இதமாகச் சிரித்திருந்த செவ்வரத்தையில் சிலகணம் கண்மயங்கி கனகாம்பரம், கல்யாணி, வாடாமல்லிகை என்ற வடிவங்களில் இதயத்தைத் தொலைத்துக் கொண்டு ஒர்மாய்ஓங்கி வளர்ந்திருந்த வில்வையினை ஒரு தரம் நோட்டமிட்டு, மொத்தத்தில் அந்த நந்தவனத்தில் உலவும் வண்ணமயிலாக மலரோடு மலராக மங்கையவள் பல கதை பேசிப் பேசி மலர் கொய்ய, அவள் கைபட்டுக் கொய்த மலர்கள் மோட்சம் கண்டவைபோல் குதூகலிக்க மலர்த்தட்டை ஏந்திவரும் மலர்க்கொத்தாய் மீண்டு மனை புகுந்தாள் சுதந்திரா.

சாமி அறைக்குள் வந்த

அமர்ந்து வாழை நார் எடுத்து வடிவாய் இரு கதம்ப மாலை கட்டி ஒன்றை அந்த அறையில் உள்ள குல தெய்வத்துக்கு சூட்டிக் கும்பிட்டு, மற்றொன்றை அவள் திருவெம்பாவை பூஜைக்கு சிவன் கோயிலுக்குக்கொண்டு போக ஆயத்தமாய் வைத்திருந்த அழகிய பூஜைத் தட்டில் சுற்றி வைத்து தனக்கென கனகாம்பரம் தனியாய் முடிந்து தலையில் வைத்துக் கொண்டாள். எந்த மங்கையின் கூந்தலுக்கும் அந்த மலரின் மங்கள நிறம் பொங்கும் அழகாச்சே! சுதந்திராவின் கூந்தலில் கனகாம்பரம் சுந்தரமாய் சிரிக்க, நெற்றியில் இட்ட நீறும் 'சாந்தும் அவளை பூமியில் உலவும் மார்கழி' மாதத்து குளிர்நிலவாக்க....

சற்று நேரத்தில் பூஜைத் தட்டை எடுத்துக்கொண்டு கோயிலுக்குப் புறப்பட்டாள். வீதியில் இறங்கி நடந்தவளின் கண்கள் வியப்பால் விரிகின்றன! வீதி எங்கும் விழாக் கோலத்தின் களை, வண்ண விளக்குகளின் வரவேற்புக் கோலம் நெஞ்சை மயக்குகிறது. தென்றல் அன்னையின் தாலாட்டில் மயங்கிய தோரணங்கள் தொட்டில் குழந்தைகளாய் ஆடி மகிழ்கின்றன. கரும்பும் வாழையும் கை கோர்த்து கலகலப்பாய் சிரிக்கின்றன. தென்னங் குலையோடு சேர்ந்திருந்த பாளைகள் புன்னகை மாறாமல் புதுக்கவிதை படிக்கின்றன. அந்த வழியாலே வயலுக்குப் போன காளை மாட்டு வண்டிகளின் கழுத்து மணியோசை கர்நாடக சங்கீதமாய் காதுகளில் இனிக்கிறது.

அந்த விடிகாலையிலும் வீதி எங்கும் மக்கள் கூட்டம் எல்லோரும் அந்தக் கிராமத்து தமிழ் முஸ்லிம் மக்கள்தான். அன்னையர்கள் தந்தையர்கள், கன்னியர்கள், காளையர்கள் பட்டாம் பூச்சிகளாய் பறந்து திரியும் சிறுவர் சிறுமியர் என்று எல்லா வயதினரும் எந்தப் பயமும் கவலையுமின்றி ஏகாந்தத்தில் சுதந்திரமாய் உள்ளக் களிப்போடு, உலவுகின்ற காட்சி அவள்நெஞ்சைத் தொடுகிறது. எல்லோரையும் கூர்ந்து பார்க்கிறாள் பாதி அவளுக்கு தெரிந்த முகங்கள் தான். மீதி தெரிந்தும் மறந்த முகம்களாக இருக்கலாம்.

ஆங்கே வீதியின் ஒவ்வொரு சந்திப்பிலும், திருப்பத்

யைக் காண்கிறாள் சுதந்திரா. காக்கை கூட அசுத்தப்படுத்தி விடக் கூடாது என்பதற்காக கண்ணாடிப் பெட்டிக்குள் கவனமாய் மாலை போட்டு வைக்கப்பட்டுள்ள நிழற்படத் திருவுருவங்கள் அவை. ஒவ்வொன்றாய் நின்று நிதானித்து உற்றுப் பார்க்கிறாள். அத்தனையும் அந்தக் கிராமத்தின் இளம் தளிர்கள் தான். ஈழ மண்ணிற்கு தங்கள் உடலை உரமாக்கியவர்களாம். பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய அவர்கள் ஒவ்வொருவரின் வீர வரலாறும்கல்லிலே எழுதப்பட்டிருக்கிறது. காலத்தால் அழியக் கூடாது என்பதற்காக. நெகிழ்ந்து போகிறாள் சுதந்திரா. அந்த உருவங்கள் இருக்கும் இடத்தில் எல்லாம் அவள் கரங்கள் அவளை அறியாமல் குவிகின்றன.

ஆலமரத்தடி சிவன் கோயில் அண்மிக்கிறது. ஆலமரம் சிங்காரமாய் சிரித்துக் கொண்டிருக்கும் காட்சி முதலில் கண்ணில் படுகிறது. ஆலமரமே சுகம்தானா? நலம் தானா? என்று கேட்கத் தோன்றுகிறது சுதந்திராவுக்கு! அன்று பல பிச்சைக்காரர்களுக்கு புகலிடம்அளித்த ஆலமரம். வெய்யிலில் வாடி வருவோர்க்குத் தன் பரந்த குடையின் கீழ் நிழல் கொடுத்த ஆலமரம் என்று எத்தனை சிறப்பு அந்த ஆலமரத்திற்கு! ஆனால் அதன் அடியில் இன்று பிச்சைக்காரர்கள் என்று யாரையும் பார்க்க முடியவில்லை.

கோயிலைச்சுற்றி பக்தர்கள் கூட்டம் பரந்திருந்த காட்சி சுதந்திராவின் கண்களுக்கு புது விருந்தாய் அமைகிறது. பக்தியோடு கோயிலை சுற்றி முடிக்கிறாள் சுதந்திரா. அங்கே ஒரு புறம் பல வருடமாய் பார்க்கத் துடித்த, சின்ன வயதில் சேர்ந்து படித்த பள்ளித் தோழிகளைக் கண்டு மகிழ்கிறாள். கட்டித் தழுவி அன்பு முத்தமும் இட்டுக் கொள்கிறாள்!

பூஜை தொடங்குகிறது. கோயிலுக்குள் சென்றவள் கூட்டத்தோடு சாமி கும்பிட்டுக் கொள்கிறாள். பூஜைத் தட்டை அர்ச்சகரிடம் கொடுத்து அர்சனை செய்து கொண்டாள். கோயிலில் அன்று பார்த்த அதே அர்ச்சகர் கொஞ்சம் தளர்ந்திருக்கிறார். அவர் தலையில் கூட கொஞ்சமாய் வெள்ளையடித்திருக்கிறது. காலத்தின் கோலத்தில் எந்த மனிதனும் அப்படித்தானே! அவள் மட்டும் என்ன அன்று இந்தக் கோயில் வீதியில் துள்ளித்திரிந்த சிறு பிள்ளையாகவே இருக்கிறாள்? நடை

திலும் எத்தனை மாறுதல்கள் இன்று!

கோயிலில் பூஜை முடிந்து கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாய் கலைகிறது! அதற்குத் தானே காத்திருக்கிறாள் சுதந்திரா. அவளுக்கு கூட்டத்தில் சாமி கும்பிடுவதில் ஏனோ திருப்தியில்லை. சின்ன வயதிலிருந்து கூட்டம் கலைந்த பிறகுதான் எம்பெருமானை தனியே தரிசிப்பாள் அதில் தான் அவளுக்கு பரம திருப்தி. அந்தப் பழக்கம் இன்றும் தொடர்ந்தது.

சற்று நேரத்தில் கூட்டம் முழுமையாய் கரைந்து விட ஆதவனும் புதுத்தெளிவோடு தன் ஒளிக்கீற்றுக்களை கோயிலுக்குள் மெல்லப் பரப்பியிருந்தான், அங்கு எழுந்தருளி இருக்கும் எம்பெருமானையும் இடப்பாகத்திலே வீற்றிருக்கும் அன்னை உமையையும் இப்பொழுதுதான் முழுமையாக கூர்ந்து பார்க்கிறாள்சுதந்திரா அவர்கள் முகத்திலும் எத்தனை பொலிவு! இதுவரை அவள் காணாத மகிழ்வு! எத்தனை வருடங்களுக்குப் பிறகுஅந்தத் திருமுகங்களைக் காண்கிறாள்.

நெஞ்சத்தை இன்பச் சுமை அடைக்க கண்கள் அந்தக் காட்சியைக்கண்ட ஆனந்தத்தில் நிரம்பி வழியசுதந்திரா வாய் மலர்ந்து பேசுகிறாள் இறைவனோடு! ''எம்பெருமானே! ஈரேழுலோகத்தையும் ஆளும் ஈஸ்வரனே! அன்னையிலும் அன்பு கொண்டவனே! நான் பருவ வயதை எட்டிப் பிடித்திருந்த பொழுது நாட்டில் முற்றிய இனப்பிரச்சனையால் இந்தக் கிராமத்தில் பட்டுப்போன வசந்தங்கள் மீண்டும் பல வருடங்களுக்குப் பிறகு இனிய புதுவசந்தமாக மலர்ந்திருக்கிறதே!'' என்று இறைவனின் திருவடி முன் நெஞ்சம் இனித்து நின்றவளை ஐந்து மணிக்கு வைத்த மேஜைக் கடிகாரத்தின் அலாரம் அவசரமாய் அலறி எழுப்புகிறது!

சொந்தக்கிராமம் சீரழிந்த நிலையில் அந்தக்கிராமமக்கள் எங்கெங்கோ பிரிந்து போக பதின்மூன்றுவருடங்களுக்கு முன் நகரத்திற்கு வந்த சுதந்திராவின் குடும்பம் இன்று வரை அங்கு ஒரு வாடகை வீட்டில் குடியிருக்கிறது. நகரத்திலேயே படிப்பை முடித்த சுதந்திரா இப்பொழுது அங்கேயே ஒரு பள்ளிக்கூடத்தில் தமிழ் ஆசிரியையாக கடமையாற்றுகிறாள். அவள் பள்ளியில் அரையாண்டுப்பரீட்சை முடிந்திருந்தது. அவள் கற்பிக்கும் வகுப்பு மாணவர்களின் பரீட்சைத் தாள்களை அதிகாலை ஐந்து மணிக்கு எழுந்து திருத்தும் நோக்கத்துடன்தான் இரவு படுக்கைக்குப்போகும் போது அலாரம் வைத்திருந்தாள். அதுதான் அவளின் தூக்கத்தை இப்பொழுது கலைத்தது.

படுக்கையில் எழுந்து உட்கார்ந்து சுற்றும் முற்றும்பார்த்தாள் சுதந்திரா! ஓ! அத்தனையும் கனவா?! இல்லை... எதிர்காலத்தின்உண்மைவிளைவா? விடிகாலைக்கனவு பலிக்கும் என்று சொல்வார்களே! அறிஞர்கள் கூட அப்படிச்சொல்லியிருக்கிறார்களே! அவர்கள் வாழ்விலும் விடிகாலை கனவால் பல திருப்பங்கள் நிகழ்ந்திருக்கிறதாமே! அப்படி என்றால் இந்தக்கனவு பலிக்குமா? ஈழத்தமிழருக்கு எதிர்காலம் புதுவசந்தமாக அமையுமா? என்று பல கேள்விகளை விடை தெரியாமல் கேட்டுக் கொண்டிருந்தவள் இறுதியில் எது எப்படியோ நல்லதையே நினைத்து நல்லதையே நம்புவோமே! நம்பிக்கைதானே வாழ்க்கை! என்று மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டு உற்சாகமாக எழுந்திருந்தாள், பரீட்சை தாள்களை திருத்துவதற்காக!

## யாழ் சம்பந்தமான கொழும்பு அலுவலகம் மூடல்:

### தமிழ் மக்கள் புரிதவிப்பு!

கொழும்பு பம்பலப்பிட்டியில் அமைந்திருக்கும் பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகமான 'கற்பகம்' கட்டிடத்தின் மேல் மாடியில் இயங்கிய யாழ்ப் பாணச் செயலகத்தின் கிளை அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கிறது.

இக் கிளை அலுவலகத்தில் இருந்து செயற்பட்ட யாழ் மாவட்ட அரசாங்க அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி இரகசியப் பொலீசாரினால் அழைத்துச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார். அதேவேளை, அவ்வலுவலகத்தில் பணிபுரிந்தஏனைய உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

யாழ் மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து கொழும்பிலும் தென்பகுதியிலும் வாழும் ஒய்வூதியக்காரர்களின் கொடுப்பனவுகள் தொடர்பான பத்திரங்களை உறுதிப்படுத்தி அவர்கள் ஓய்வூதியங்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை யாழ் செயலகத்தின் இக்கிளை அலுவலகமே மேற்கொண்டு வந்தது. இது இப்போது மூடப்பட்டிருப்பதால் இடம் பெயர்ந்த ஓய்வூதியக்காரர்கள் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்க விருப்பதாக அஞ்சப்படுகிறது.

இதேவேளை, யாழ்மாவட்டத்துக்குத் தேவையான அத்தியாவசிய உணவு மற்றும் மருந்து வகைகளை அங்கு அனுப்புவதற்கு மேற்கொள்ளப்பட்டு வந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைத்துச் செய்வதிலும் இக்கிளை அலுவலகம் ஈடுபட்டிவந்தது. இது மூடப்பட்டிருப்பதால் யாழ் மாவட்டத்துக்கான அத்தியாவசியப் பொருள்களை அனுப்பிவைப்பதிலும் பெரும் சிரமம் ஏற்படவிருக்கிறது.

www.padippakam.com



# தமிழ் மக்களை அன்னியப்படுத்தும் சந்திரிகா அரசின் தவறான போக்கு

## 'வீரகேசரி' வெளியிடும் கவலை

''மௌனத்தின் காரணமாக அனைத்துத் தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களே'' என்ற ஜனாதிபதியின் கூற்றின் பின்னர் தமிழ் மக்களின் மத்தியில் சற்று ''இருந்த நம்பிக்கையும்'' நிலை தளர்ந்து போயுள்ளது!

தமிழ் மக்கள் நாட்டில் எங்குமே பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். முதியவர் முதல் இளையவர் வரை யாவரையுமே விடுதலைப் புலிகளாகக் காணும் ''சிந்தனை மாற்றமும்'' சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கப் பட்டுள்ளது.

பாதுகாப்புப் பிரிவினரின் அனைத்து வன்முறைகளையும் அங்கீகரிப்பது போலக் காரியங்கள் நடந்தேறுகின்றன. அநாவசியத் தடைகள், தாக்குதல்கள், விசாரணைகள், சோதனைகள் என்ற வரிசையில் யாவுமே தமிழ் மக்களை அன்னியப்படுத்துகின்றன.

பௌத்த விகாரையில் குண்டு மீட்பு முதலாக வாய்க்கால், வீதியோரம் எல்லாம் குண்டுகள் தேடிப் பெறப்படுகின்றன. தலைநகரிலும் இதர பிரதேசங்களிலும் நடைபெறுபவை தமிழ் மக்களை எரிமலையின் விளிம்பில் இருக்கும் நிலைக்குத் தள்ளியுள்ளன.

இரகசியப் பொலீஸார் எனத் தம்மை அறிமுகப்படுத்தித் தமிழரைப் பயமுறுத்தி வழிப்பறிகள், சீருடையிலோ, சாதாரண உடையிலோ சென்று தமிழ் வீடுகளையும் வியாபார நிலையங்களையும் கொள்ளையிடல் போன்றவை சர்வ சாதாரணமாகியுள்ளன.

இவற்றில் சிலவே பத்திரிகைகளில் வெளிவருகின்றன. தலைவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தும் மாற்றங்கள் எதுவுமேயில்லை. தேடுதல்களின் போது கைதாவோர் காணாமல் போகின்றனர். பாதுகாப்பு உறுதிப்பாடுகளின் மத்தியில் தமிழினமே பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

சுற்றி வளைத்து ஆமர்வீதி வீடொன்றில் கைதான இருவருக்கு என்ன நடந்தது என்பது இன்னுமே தெரியாது. இது பற்றிய எந்த விதமான அரசநிலைப்பாடும் இவ்வரை வெளியிடப்படவில்லை.

காணாமல் போன இருபத்தியேழு இளைஞர்களின் சடலங்கள் கொழும்பின் புறநகர் வாவிகளில் மிதந்த செய்திகளும் வெளிவந்துள்ளன. இவையும் வெறுங் கதையாகி வரலாற்றில் ஒரு பகுதியாகியுள்ளது. அரச மனோபாவங்களும் துரித நடவடிக்கையின்மையும் நம்பிக்கையீனங்களை வளர்க்கின்றன.

வடக்கில் இடம் பெயர்ந்த பல்லாயிரக்கணக்கானோர் வடமாநில பெருநிலப்பரப்பிலும் தென்மராட்சியிலும் அகதிகளாகிக் கொட்டில்களில் வாழ்கின்றனர். இவர்களின் அவல வாழ்க்கை பற்றிப் பத்திரிகைகள் இனி எழுதுவதற்கு இடமில்லாத வகையில் வெளியிட்டுள்ளன.

கிழக்கிலங்கையில் நடைபெறும்மோதல்களில்அழிவுகளும் இடம் பெயர்வுகளும், அகதிகளாவதும்தொடர்கின்றன. வட கிழக்கில் ஷெல்லடி, குண்டு வீச்சு விமானத் தாக்குதல்களும் ஆரம்பமாகியுள்ளன. நாச்சிக்குடாவில் இடம் பெற்றவை ''பழிக்குப் பழி'' என நடைபெற்றுள்ளன.

கொலனாவ, தொட்டலங்க நிகழ்வுகளின் பின்னர் கைது செய்யப்பட்ட மலையக இளைஞர்களின் நிலைமைகள் யாவரும் அறிந்ததே. மலையகத்தில் நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர் எதுவித விசாரணையும் இன்றி நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மலையகத்திலும் இவ்விதமான நிகழ்வுகளை தொடரவிடுவதன் மூலம் வடகிழக்குப்போல இளைய தலைமுறையினர் கிளர்ந்தெழும் வாய்ப்புக்களை உருவாக்காது காலதாமதமின்றி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமானது. பாதுகாப்பு நடவடிக்கைகள் அவசியமானவை. ஆனால் அவை மக்களின் நாளாந்த வாழ்க்கையைச் சிதைப்பதாக இருக்கக்கூடாது.

அரசாங்கமும், பாதுகாப்புப் படையினரும் வட-கிழக்கு மக்கள் கொழும்புக்கு வருவதை பாதுகாப்புக் காரணங்களுக்காக இயன்ற வரை தடுக்கின்றனர். தலைநகர் நிருவாக மையமாக இருப்பதால் அன்றாடத் தேவைக்காக இவர்கள் வருவது தவிர்க்கமுடியாததே.

சமாதானத்தை ஏற்படுத்துவது, பாதுகாப்பை உறுதிப்படுத்துவது என அனைத்துத் தமிழ் மக்களையும் அன்னியப் படுத்தக்கூடாது. அனைத்து நிகழ்வுகளும் தமிழ் மக்களின் தன்மானத்தைச் சிதைப்பனவாகவே உள்ளன.

தமிழ் மக்களை வென்றெடுத்து விடுதலை பெறவைக்கும் அரசாங்கத்தின் சமாதான ஆர்வத்திற்கு எதிர்மாறாகத் தொடரும் நடைமுறைகள் விடுதலைப் புலிகளே கதி என தமிழ் மக்களை அவர்கள் பக்கமே தள்ளுவதாக இருப்பது போலத் தொடர்வது துரதிருஷ்டவசமானது!

-இவ்வாறு 'வீரகேசரி' நாளிதழ் தனது ஆசிரியத் தலையங்கமொன்றில் தன் கவலையை வெளிப்படுத்தியுள்ளது.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இனப் பிரச்சனைக்கும், 12 ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கிய பிரிவினை காலப் போருக்கும் அரசியல் தீர்வு காண அரசியல் திட்டம் ஒன்று பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வந்திருப்பது இதுவே முதல் தடவை. தெரிவுக்குழு தனது முடிவைத் தெரிவு செய்ய கால வரையறை இல்லாவிட்டால் கூடுதலான நாட்களில் கூட்டம் நடத்தி வேலையைத் துரிதமாக முடிக்க உறுப்பினர்கள் இணங்கி இருப்பதாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறினார். அரசின் இத்திட்டம் நாடு முழுவதும் விவாதிக்கும் திட்டமாக இருந்து வருகின்றது.

### ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக

# தமிழகம்முழுதும்சைக்கிள்பேரணிநடத்திய லயோலா கல்லூரி மாணவர்களுக்கு சென்னையில் பாராட்டு!

## முன்னாள் துணைவேந்தர் பரிசளித்தார்

கன்னியா குமரியிலிருந்து சென்னை வரை இலங்கைத் தமிழர் பிரச்சினையை விளக்கி மிதிவண்டிப் பேரணி நடத்தி எழுச்சியை ஏற்படுத்திய சென்னை லயோலா கல்லூரி மாணவர்களைப் பாராட்டிக் கவுரவிக்கும் விழா 27-2-96 அன்று சென்னை 'இக்சுப்' மண்டபத்தில் முனைவர் அரு. கோபாலன் தலைமையில் நடைபெற்றது. இராமாணிக்கவாசகர் அனைவரையும் வரவேற்று லயோலா கல்லூரி மாணவர்களை அவையினர்க்கு அறிமுகப்படுத்தி வைத்தார். ஈழத் தமிழர் பாதுகாப்புக் கழகத் தலைவர் ஈழத் தந்தை செல்வாவின் மைந்தர் சா. செ. சந்திரகாசன் இலங்கை அரசியல் வரலாற்றுப் பின்னணியை எடுத்துக் கூறி, லயோலா கல்லூரி மாணவர்களைப் பாராட்டிப் பேசினார். அதனைத் தொடர்ந்து பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் ச. முத்துக்குமரன் லயோலா கல்லூரி மாணவர்களுக்குப் பரிசளித்துப் பாராட்டினார். அடுத்து சுற்றுப்புறச் சூழல் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசில்கள் வழங்கப் பட்டன. விளையாட்டுக் குழு வீரர்களுக்கு உதைபந்துகளும் வழங்கப்பட்டன. கேசவன் நன்றி கூறினார்.

முன்னதாக அன்று காலை சென்னை மண்டல ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழக விளையாட்டுக் குழுக்களின் ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெற்றது. இதில் சென்னை மண்டலத்தின் கீழ் இயங்குகின்ற நான்கு மாவட்டத்தின் கீழ் உள்ள முகாம்களில் உள்ள விளையாட்டுக் குழுக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். காலை 10-00 மணிக்கு தமிழ் ஈழப் பண்ணுடன் இக்கூட்டம் ஆரம்பமாகியது. முதலில் வரவேற்புரையை செல்வராஜ் ஆற்றினார். அதனைத் தொடர்ந்து தலைமை உரையை முனைவர் அரு. கோபாலன் ஆற்றினார். அதன் பின்னர், விளையாட்டுக் குழுக்களின் பிரதிநிதிகளின் சுய அறிமுகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, சத்துணவின் முக்கியம் பற்றி திருமதி. அகிலா எடுத்துக் கூறினார். அதனைத் தொடர்ந்து விளையாட்டுக் குழுக்களின் கருத்து அறிந்து கொள்ள அவர்களை ஐந்து குழுக்களாக பிரித்து விளையாட்டில் ஏற்படும் பிரச்சினைகள் அதை இன்னும் முன்னேற்ற என்ன செய்ய வேண்டும் என்ற கருத்து அறியப்பட்டது.

1. இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கைப்பந்து வழங்கப்படல் வேண்டும்.

2. காம்போட் ஒரு வருடத்திற்கு இரண்டு வழங்க வேண்டும்.

3. கிரிக்கெட் உபகரணம் வருடத்திற்கு ஒரு முறையேனும் வழங்க வேண்டும்.

4. எங்கள் முகாம்களில் வருடத்திற்கு இரண்டு முறையேனும் விளையாட்டுப் போட்டிகள் நடத்த உதவி செய்ய வேண்டும்.

5. விளையாட்டுக் குழுவுக்கென்றும், மாணவர் மன்றத்தினர்க்கென்றும் தனித் தனியாக பொருட்கள் வழங்க வேண்டும். கரம்போட் இரண்டு வழங்க வேண்டும்.

6. பெண்களுக்கு பெற்மின்ரன் விளையாட்டுப் பொருட்கள் வழங்க வேண்டும்.

7. சில முகாம்களுக்கு மட்டுமே விளையாட்டுப் பொருட்கள் தொடர்ந்து கிடைக்கின்றன எனவும் கூறினார்கள். (சின்னப் பள்ளிக் குப்பம் முகாம்)

8. விளையாட்டுப் பொருள் உரிய திகதிகளில் வழங்கினால் உதவியாக இருக்கும்.

9. கஸ்தம்பாடி முகாமில் சிப்பிங் றோப்பைத் தவிர எந்தப் பொருளும் கொடுக்கவில்லை.

10. விளையாட்டுப் பொருட்கள் வழங்குவதில் உதைபந்து விளையாட முடியாத முகாம்களுக்கு உதைபந்து வழங்கப்படுகிறது. அதே போல் கைப்பந்து விளையாட முடியாத இடத்திற்கு கைப்பந்து வழங்கப்படுகின்றது எனவும் கூறினார்கள். இதைச் சரி செய்து கொடுத்தால்பயன் உள்ளதாக இருக்கும் எனவும் கூறினார்கள்.

அதனைத் தொடர்ந்து விளையாட்டுக் குழுவினரின் கலந்துரையாடலில் கலந்து கொண்டு தொடுக்கப்பட்ட கேள்விகளுக்கு செல்வராஜா விளக்கம் அளித்தார். அதனை தொடர்ந்து பந்துகள் உடைவது மற்றும், விளையாட்டுப் போட்டிகள் வைப்பது பற்றியும் கேள்விகள் கேட்கப் பட்டன. அதற்கு செல்வராஜா முன்னர் நடைபெற்ற சம்பவங்களை முன்னுதாரணமாகக் காட்டி விளக்கம் அளித்தார்.

தொடர்ந்து மு. பரம் மேலதிகமான விபரங்களைக் கொடுத்தார். அதனைத் தொடர்ந்துஎமது கழகத்திற்கு விளையாட்டுப் பொருட்கள் விநியோகம் செய்யும் பந்தி அவர்கள் வருகை தந்து விளையாட்டுப் பொருட்களில் ஏற்படும் குறைகளுக்கான காரணத்தை விளக்கினார். பல உதாரணங்களைக் காட்டி அதை விளக்கிக் காட்டினார். பின்னர் சில கேள்விகள் கேட்கப் பட்டன. அதற்கும் பதில்கள் கூறி விடைபெற்றார். அதன் பின்னர் ரவீந்திரராஜா சில மணித்துளிகள் பேசினார். அதனைத் தொடர்ந்து கலந்துரையாடல் நிறைவடைந்தது.

படிப்பகம்

www.padippakam.com



# நாமும் நமது சூழலும்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்சாலைகள் ஆங்காங்கே கட்டப்பட்டுள்ளதால் அதன் கழிவுப் பொருட்கள் அருகிலுள்ள ஏரிகளிலும் ஆறுகளிலும் விளைநிலங்களின் ஊடாக வாய்க்கால் வழியே கலக்கின்றன. இதனால் பல விளைநிலங்களும் அமிலத்தன்மை பெறுகின்றன. ஆறுகளிலும், ஏரிகளிலும் கலப்பதால் அதைச் சார்ந்து வாழும் உயிரினங்கள் (மலேரியா, மூளைக்காய்ச்சல்) நோயால் பாதிக்கப்படுகின்றன. கடலிலுள்ள மீன்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. நகர் புறங்களில் தேங்கியுள்ள நீர் நிலைகளினாலும் மக்கள் மலேரியா' மூளைக்காய்ச்சல் யானைக்கால் நோய் போன்ற நோய்களுக்கு ஆளாகின்றார்கள். விளைநிலங்களுக்கு பயன்படுத்தும் செயற்கை உரங்களினாலும் நீரானது மாசுபட்டு வருகின்றது. தாவரங்கள் அனைத்தும் நிலத்தடியிலுள்ள நீரைப் பாதுகாத்து அந்நீரானது ஆவியாகாமல் தடுத்து வருகின்றன. நாம் மரங்களை வெட்டுவதாலும், பல இடங்களிலும் ஆழ்குழாய் கிணறுகளை அமைப்பதாலும் நிலத்தடி நீரானது ஆவியாகின்றன. நிலத்தடி நீரானது ஆவியானால் வறட்சி நிலவுகிறது. அதுமட்டுமல்லாமல் பூமியில் வெப்பம் அதிகமாகிறது பூமியில் அதிகமாக கார்பன்-டை-ஆக்ஸைடு (102) காணப்படுவதாலும் வெப்பம் அதிகரிக்கிறது. வெப்பம் அதிகரிக்க பூமியின் வடதென் துருவங்களிலுள்ள பனிக்கட்டிகள் உருகி நீராக பூமியை நிரப்பி பூமி அழிந்து விடக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன.

*மாசடைவதை தவிர்க்க:-*

வீட்டிலுள்ள கழிவு நீர்களை சுத்தப்படுத்த ஒரு சிறந்த வழியை ஜெர்மன் நாட்டிலுள்ள கிக்குத் என்பவர் 1992 ஆம் ஆண்டு கண்டார். அதாவது, ''கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை'' எனப் பெயர். இதில் கழிவுநீர், மலசலகூட நீர் மூன்று அறைகள் கொண்ட தொட்டியில் முதல் தொட்டியில் விடப்படுகிறது. அதிலிருந்து இரண்டாவது முதல் தொட்டிக்கு கழிவுநீர் செல்கிறது. மிக அடர்த்தியான பொருட்கள் இரண்டாவது தொட்டியின் அடியில் தங்கி விடுகிறது. மீதி மூன்றாவது தொட்டிக்குச் செல்கிறது. கழிவுப் பொருட்களுடன் கூடிய நீர் மூன்றாவது தொட்டியில் இருந்து தாவரம் வளர்க்கப்படும் மற்றுமொரு தொட்டிக்கு அனுப்பப் படுகிறது. இதில் வளர்க்கப்படும் தாவரத்திலுள்ள வேரில் ஏரோபிக், அனேரோபிக் என்ற பாக்டீரியாக்கள் கழிவுப் பொருட்களை பிளவுபடுத்தி உறிஞ்சுகிறது. வெளிவரும் நீர் மிகத் தூய்மையாக இருக்கும்: அதன் PH=6.9 ஆகும் இதை அனைத்துத் தேவைக்கும் பயன்படுத்தலாம்.

ஆழ்குழாய் கிணறுகளை தவிர்த்துக் கொள்ள சிறிய அணைகளை (Check dams) கட்டி மழைநீரைத் தேக்கி வைத்தல் மூலம் நிலத்திற்கு நீரைக் கொடுத்து பூமியின் வெப்பநிலையை குறைக்கலாம். காற்று பூமியின் வெப்ப நிலை 1-5oc—25oc அதிகரித்தால் கடல் மட்டம் 20cm-40cm வரை உயரும். வெப்பநிலை 2.5oc—3oc வரை உயர்ந்தால் கடல் மட்டம் 80cm வரை உயரும்.

*காற்று:-*

ஒவ்வொரு மனிதனின் உயிர்மூச்சும் காற்றே காற்றானது இயற்கை அன்னை நமக்களித்த பெருஞ் செல்வம் உயிரினம் வாழ்வதற்கு மிக முக்கியமானது காற்றாகும். காற்றின்றி மனிதனால் உயிர் வாழ முடியாது. காற்று மாசுபடுவதால் உயிரினங்கள் நோயால் பாதிக்கப்படுகின்றன. காற்றில் 78% நைட்ரஜனும் (N) 21% ஆக்ஸிஜனும் (o), 0.03% கார்பன்-டை-ஆக்ஸைடும் (co2), பிற வாயுக்கள் 0.97% உள்ளது. இந்தளவு மாறாமல் இருக்கும் வரை பூமியிலுள்ள உயிரினங்களுக்கு பிரச்சனை ஏதுமில்லை. மனிதன் ஆக்ஸிஜனை உள்ளிழுத்தும் co2 ஐ வெளிவிட்டும் உயிர்வாழ்கின்றான். தாவரங்கள், மரங்கள் co2 ஐ உள்ளிழுத்தும், ஆக்ஸிஜனை வெளிவிட்டும் வாழ்கின்றன. இச்சமநிலைகளில் மாற்றம் ஏற்பட்டால் சூழலுடன் உயிரினங்களும் பாதிக்ககூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன.

பல காரணங்களால் காற்றானது மாசுபட்டு வருகின்றது.

மனிதன் தனது அறிவியல் முன்னேற்றத்தால், தொழில் வளம் பெருக்கி, காற்று மண்டலத்தின் கட்டமைப்பை மாற்றி வருகின்றான். இவை சுற்றுச் சூழலில் மிகப் பெரும் பாதிப்பை கொணர்ந்துள்ளன. கரியமில வாயு (co2) போன்ற வாயுக்கள் பூமியின் கதிர்வீச்சை பெருமளவு கிரகித்து பின்னர் அதைப் பூமிக்கே திருப்பி பாய்ச்சுகின்றன. சுலபமாக விண்வெளிக்கு போய்ச் சேரும் இவை உலகின் தட்ப வெப்ப நிலைகளை சிறுகச் சிறுக அதிகரிப்பதை பசுமையக விளைவு என்று அழைக்கிறோம்.

எரிபொருட்கள், வாகனங்கள், சுரங்கங்கள், மற்றும் உருக்காலைகள், தொழிற்சாலைகள் முதலியன co2 ஐ உற்பத்தி செய்வதில் முதலிடம் பெறுகிறது உலகம் முழுவதும் காடுகளின் அழிவும், co2 ஐ உள் வாங்கி ஆக்ஸிஜனை வெளியிடும் சக்தியும் வளி மண்டலத்தில் co2-ன் அடர்த்தியை அதிகரிக்கிறது. இதனால் பூமியின் வெப்பநிலை உயர்கிறது.

(அடுத்த இதழில்)

# ஆயுதங்களை கைவிடுமாறு புலிகளைக் கோரும் பொறுப்பை தமிழரிடம் சுமத்துவது மகா தவறு

இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வென்று காணப்படும் வரை விடுதலை புலிகள் இயக்கத்தினர் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டுமென்றோ, தேசிய அரசியல் பொது வோட்டத்தில் இணைய வேண்டுமென்றோ தமிழ்மக்களைகோர இயலாது. தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு அவர்கள் பலவகையான ஒடுக்கு முறைகளுக்குள்ளாக்கப்பட்டதன் காரணத்தினால் தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் இறங்க வேண்டியேற்பட்டது. தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கத்தின் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளில் காணப்படும் குறைகளை சுட்டிக்காட்டி தமிழ் மக்களின் உரிமைகள் சாத்தியமான அளவுக்கு தீர்வுத்திட்டத்தில் அங்கீகரிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளையே தமிழ்க் கட்சிகளினால் மேற்கொள்ள முடியும். எனவே, புலிகள் இயக்கத்தை வழிக்குக் கொண்டுவருவதற்கான பொறுப்பு என்று அரசாங்கம் கருதுகின்ற சுமையை தமிழ் மக்களின் தலையில் சுமத்துவது மகா தவறாகும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் மு. சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்திய பத்திரிக்கையாளர் ஒருவருக்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அளித்திருந்த தொலைக்காட்சி பேட்டியொன்றில் கொழும்பிலும் தெற்கிலும் ஒவ்வொரு தமிழரும் தங்கள் மௌனத்தின் மூலம் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளை ஆதரிக்கிறார்கள்- அவர்கள் தங்கள் மௌனத்தை கலைக்க வேண்டும் என்று தெரிவித்த கூற்று தொடர்பாக சிவசிதம்பரத்திடம் அபிப்பிராயம் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டணித் தலைவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்ச்சியாக பதவிக்கு வந்த சிங்கள அரசாங்கங்களால் புறக்கணிக்கப்பட்டு வந்ததன் காரணமாக ஏற்பட்ட விரக்தியே தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்த செய்தது. ஆகவே இலங்கையில் தற்போது உருவாகியுள்ள ஆயுதக் கலாசாரத்துக்கு முக்கிய பொறுப்பாளிகள் கடந்தகாலங்களில் தமிழர்களின் உரிமைகளை வழங்காது அவர்கள் மீதான ஒடுக்குமுறைகளுக்கு காரணமான அரசாங்கங்களே.

இனப்பிரச்சினையின் காரணமாக உருவான ஆயுத கலாசாரம் அது தீரும் போது தான் முடிவுக்குவரும். தமிழர்களின் உரிமைகளுக்காக ஆயுதமேந்திய விடுதலைப் புலிகளை அவர்களது பிரச்சினைகள் நியாயமான வழியில் தீர்த்து வைக்கப்படு முன்னர் ஆயுதத்தை கைவிடுமாறு தமிழ் மக்களால் கூற முடியாது. இனப்பிரச்சினை நியாயமாக தீர்க்கப்பட்ட பின்னரே அதை தமிழர்கள் செய்ய வேண்டும் என்று எதிர் பார்க்க முடியும்.

பௌத்த பிக்குமார் சிலர் தமிழர்களுக்கு என்ன பிரச்சினை உள்ளது? என்று கேட்டுள்ளது பற்றி வினவப்பட்டதற்கு பதிலளித்த சிவசிதம்பரம் பௌத்த பிக்குகள் மட்டுமின்றி சில இனவாத பெரும்பான்மையின அரசியல் தலைவர்களும் இப்படியாகத்தான் பேசி வருகின்றனர். எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க, டட்லி சேனநாயக்க போன்ற தலைவர்கள் தமிழர்களுக்கு பிரச்சினை உண்டு என்றபடியால்தான் அது சம்பந்தமான உடன்படிக்கைகளை செய்ய முன்வந்தனர். ஆகவே இவர்கள் இப்படிப் பேசுவது பிரச்சினையை தட்டிக்கழிக்க எடுக்கும் முயற்சியாகும் என்று தெரிவித்தார்.

தமிழர்கள் பிரச்சினை தொடர்பாக பண்டாரநாயக்கவினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோது இப்படியான பௌத்தபிக்குமார்கள் மற்றும் இனவாத தலைவர்களின் எதிர்ப்பு காரணமாகவே அவை நடைமுறைப்படுத்தப்படாமல் போனது. அதன் விளைவாகத்

ஆகவே மீண்டும் இப்படியான ஒரு சூழ்நிலை உருவாகாதவாறு ஜனாதிபதியும், சிங்கள மக்களும் விழிப்புடன் இருக்க வேண்டும். அத்துடன் இலங்கை ஒரு பௌத்தநாடு என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளே இனவொடுக்கலுக்கும், தற்போது உருவாகியுள்ள இனப்பிரச்சினைக்கும் முக்கிய காரணமாகும். அந்த நிலையை கைவிட்டு அனைத்து மக்களையும் மதிக்கும் வகையிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் சிவசிதம்பரம் தெரிவித்தார்.

## வெம்பக்கோட்டை முகாமில் கழக சுயதொழில் திட்ட பகிர்ந்தளிப்பு!

''ஈ.ழ எதிலியர் மறுவாழ்வு கழக''த் தினரால் அகதி மக்களுக்கென கடந்த ஆறுவருட காலமாக பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களில் ஒன்றாகிய சுயதொழில் ஊக்குவிப்புகளின் ஒரு பகுதியாகத் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு கோழிகள் வழங்கும் நிகழ்ச்சி 22-03-1996ல் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கழக தலைமையக கோழி வளர்ப்பு திட்டப் பொறுப்பாளர் இரவிச்சந்திரன், மருத்துவப்பிரிவு அலுவலர் கனேஷ், நெல்லை மண்டலப் பொறுப்பாளர் மகேஸ்வரன், தென்மண்டல் கோழி வளர்ப்பு பொறுப்பாளர் T. கணேஷ், முகாம் விளையாட்டுகழக சார்பில் சித்திரவேல், ''mmsss'' மாவட்டக் கல்வி இணைப்பாளர் K.S. காசிமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர்!

214 குடும்பங்கள் வசிக்கும் இம்முகாமில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள 20 குடும்பங்களுக்கு தலா 10 கோழிகள் வழங்கப்பட்டன, முன்னதாக இத்திட்டம் செயலாக்கப்பட வேண்டிய முறைகளையும், வளர்ப்பு மற்றும் பங்களிப்பு முறைகளையுப் இரவிச்சந்திரன் தெளிவாக விளக்கிக் கூறினார்.

இத்திட்டத்தை முறைப்படி செயல் படுத்தும் குடும்பங்களுக்கு தற்போதைய நிலையில் ரூ. 300 பெறுமதி உள்ளதாக இருந்தாலும். இதன் பலனை முழுமையாகப்பெறும் பொழுது ரூபாய் 4000க்கு மேல் கிடைக்கும் என 24.03-96ல் ஆய்வுகள் நடத்தச் சென்ற காசிமுத்து கோழி

(6ம்-பக்கத்தொடர்ச்சி

இருந்து ராணுவத்தின் கவனத்தைத் திசை திருப்பும் முயற்சியாக இருக்கக்கூடிய செயலாக கிழக்கில் அடித்துவிட்டு ஓடும் தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளனர். ராணுவம் புலிகளின் வளமான கோட்டையான யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி நான்கு மாதங்களுக்குப் பின்னர் இன்னொரு பெரிய தாக்குதலைத்தொடங்கும் தறுவாயில் இருப்பது போல் தெரியும் யாழ் தீப கற்பத்தில் மூன்றில் இரண்டு பங்குப் பகுதி இன்னமும்புலிப்படையின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்றது. இப்பகுதியின் மீதுதான் ராணுவம் தாக்குதல் நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றது.

இப்பகுதியில் வாழும் மக்களை வீடுகளை விட்டு வெளியேறும் படி புலிகள் ஏற்கனவே வேண்டியுள்ளனர். காப்பகங்கள் அமைக்கப்பட்டு முன்னேறி வரும் இராணுவத்தை எதிர்பார்த்து யுத்தத்தின் வேகத்தைக் குறைப்பதற்காக நிலக்கண்ணிகள் வெடிக் கம்ப

www.padippakam.com



# வன்னியில் உள்ள அகதிகளுக்கு உணவு நிவாரண பங்கீட்டை அதிகரிக்க வேண்டும்

## ஐ.நா. உலக உணவு திட்ட அதிகாரிகள் அரசிடம் கோரிக்கை

யாழ்குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து இடம் பெயர்ந்து வன்னிப் பகுதியில் தங்கியிருக்கும்இலட்சக்கணக்கான தமிழ் அகதிகளுக்கு வாராந்தம் வழங்கப்படும் உலர் உணவு பங்கீடு அவர்களின் தேவைய்யை நிறைவேற்றப் போதுமானதாக இல்லை என்பதை இலங்கை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கும் ஐக்கிய நாடுகள் உலக உணவுப் பங்கீட்டை அதிகரிக்குமாறு வலியுறுத்திக் கேட்டிருக்கிறார்கள்.

வன்னிப் பிரதேசத்தில் அகதிகளின் நிலவரங்களை நேரில் கண்டறிய உலக உணவுத்திட்டத்தின் உயரதிகாரி கடந்த வாரம் அங்கு விஜயம் மேற்கொண்டனர்.

வறட்சியின் காரணமாக படுமோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதியாக வன்னிப் பிரதேசமே இருக்கிறது. இடம் பெயர்ந்த காரணத்தாலும் வறட்சியினாலும் அங்கு 5 இலட்சத்து 10 ஆயிரம் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று இந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

போரின் விளைவாக பல நெருக்கடிகளை எதிர் நோக்கும் இலங்கை அரசாங்கம் படுமோசமான நிலைமைக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதனால் அவசரகால உணவு உதவியைப் பெறுவதற்கு உதவுமாறு ஐ. நா. உலக உணவுத் திட்டத்தை இலங்கை அரசாங்கம் கோரியிருக்கிறது. நாட்டில் சுமார் 10 இலட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு அரசாங்கம் தற்போது உணவு நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றது. பருவப்பெயர்ச்சி மழை பெய்யாததால் நிலைமை மேலும் மோசமடைந்து விட்டது. உணவு நிவாரண உதவிக்கான அரசாங்கத்தின் பட்ஜெட் எதிர்வரும் ஆகஸ்ட் மாதமளவில் தீர்ந்து விடக்கூடும். ஏற்படக் கூடிய உணவுப்பற்றாக்குறையைச் சமாளிக்க உதவி வழங்கும் நாடுகளின் ஆதரவைப் பெற திட்டம் ஒன்றை வகுத்துத் தருமாறு உலக உணவுத் திட்டத்தை அரசாங்கம் கேட்டிருக்கிறது என்று அந்த அதிகாரிகள் கூறினர்.

வன்னிப்பகுதிக்கு கடந்த வாரம் விஜயம் செய்த உலக உணவுத் திட்ட அதிகாரிகள், அப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியமான போஷாக்கு மற்றும் விவசாய உணவுத் தேவை பற்றிய விரிவான மதிப்பீடொன்றைச் செய்வதற்கென இன்னொரு குழுவை விரைவில் அனுப்பி வைக்கவிருப்பதாக உலக உணவுத் திட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த நவம்பர் மாதத்திலும் டிசம்பர் மாதத்திலும் மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்பட்டதைவிட மிகவும் குறைவானதாக இருந்ததால் மழையை நம்பிய நெற் பயிர்ச்செய்கை படுமோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறது என்று விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் சரத் அமரசிறி தெரிவித்தார்.

வழமையாகக் கிடைக்கும் 8 கோடி 50 இலட்ச புசல் நெல்லை விட இத்தடவை 2 கோடி புசல் குறைவாகவே கிடைக்கும் என்று விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிறுவன அதிகாரிகள் மதிப்பிட்டிருக்கிறார்கள்.

தொடரும் வறட்சியினால் இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பயிர்களான தேயிலை மற்றும் இறப்பரும் பாதிக்கப்படப் போவதாக பெருந்தோட்டத்துறை வட்டாரங்கள் கவலை தெரிவித்திருக்கின்றன.

## சந்திரிகா அரசுக்கு பெருத்த அரசியல் நெருக்கடி

### பி.பி.சி. தரும் செய்தி

இலங்கைஅதிபர்சந்திரிகா குமாரதுங்க அவர்கள் அரசு கலைத்த இரண்டு உள்ளூர் ஆட்சி மன்றங்களை நீதிமன்றம் மீண்டும் பதவியில் அமர்த்தியும், திரும்பவும் அவற்றைக் கலைத்ததன்மூலம் அரசு அரசியல் சட்ட அமைப்பை மீறி விட்டது என்றும் கூறியுள்ளது.

இவ்விரு மன்றங்களும் எதிர்கட்சியின் ஆட்சிப்பொறுப்பில் இருந்தவையாகும். நிதி விவகாரத்தில் ஊழல் மற்றும் தவறாகப் பயன்படுத்துதல் ஆகிய குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டதை அடுத்து மாகாண ஆளுநர்கள் அம்மன்றங்களைக் கலைத்தார்கள். இதில் சம்பந்தப்பட்ட இரு முதல் அமைச்சர்களும் வழக்குக்காக அவர்கள் செலவளித்த பணத்தை வழங்குமாறுவழக்கு நடுவர் மற்றும் மாகாண ஆளுநர்க்கு நீதிமன்றம் ஆணையிட்டு உள்ளது. உள்ளூர்ஆட்சி மன்றத் தேர்தல் நடக்கும் இந்தத் தருணத்தில், நீதி மன்றத்தின் இந்த ஆணைகக்குக்கட்டுப்படுவது அரசுக்குப் பெரிய அடியாக இது அமையக் கூடும் என்று கண்ணோட்டக்காரர்கள் கூறுகின்றார்கள்.

## துயிலாத் துயரமாய்?...

சொந்தமில்லை...
பந்தமில்லை...
நொந்து நாங்கள் வாழ்கிறோம்
எந்த நிலை வந்த போதும்
வெந்து துயர் வடிக்கிறோம்
மந்த மதி மாந்தர்களால்
சொந்த மண்ணை இழந்தோம்
இந்த நிலையே இன்னும்
வந்தால்—எங்கு
எந்த மண்ணில் வாழுவோம் ?
கந்தலின்றி...கஞ்சியின்றிக் கண்ணீர்
சிந்தித் துடிக்கிறோம்
சிங்கம் போல சிறிப்பாய்ந்து வாழ்ந்தோம்
சிங்களர் கூட்டம் கொன்று போட
சிதறி நாங்கள் பிரிந்தோம்
சிந்தனைசெய்...சிந்தனைசெய் தமிழினமே
சிந்துமெங்கள் குருதியும் உங்கள் குருதியும் ஓரினமே
விடுதலை நாள் எதிர்நோக்கி
விழியில் இன்னும் துயிலில்லே
கெடுதலை தான் எவருக்கும்
நாங்கள் செய்ய நினைக்கலே
துயிலாத் துயரமாய்
எங்கள் வாழ்வு இருக்குது
துயில் கூட எங்களுக்கு
துயரமாக ஆனது...?

கவிசுரபி
சுப. சந்திரசேகரன்

## வாசகர் நெஞ்சம்

''சிறில் மாத்யூ வழியில் சந்திரிகா குமாரதுங்க-ஜெயவர்த்தனா பாதையில் இனவெறி மிரட்டல்-அந்துலத் முதலி போல தமிழர்களைத் தாக்க ஆயத்தம்'' என்ற தலைப்புகளுடன் கூடிய முதல் பக்கக் கட்டுரை சந்திரிகாவின் சமாதான வேடத்தை தோலுரித்துக் காட்டுவதாக இருந்தது.

தி. திருஞான சம்பந்தம், கோவை-4.

''எமைத் தலைமைதாங்க எழுந்துவா மீண்டும்'' தந்தை செல்வா பற்றிய ஈழவேட்பனின்கவிதை நெஞ்சைத் தொட்டது.

N.S. மனோ, சென்னை-72.

'தேர்தலும் தேற்றுதலும்'-ஆசிரியத் தலையங்கம் அருமை. தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் அதுபற்றிக் கவனம் செலுத்தினால் நல்லது.

பொ. மாரியப்பன், ஈரோடு-11.

''மீண்டும் மனிதனாகிறான்...''-செல்வி சித்திரா தேவசகாயத்தின் சிறுகதை இன்று முகாம்களில் பெரும்பாலான குடும்பங்களில் நடக்கிற சம்பவங்களின் படப்பிடிப்பு.

வே.ஆ. கணபதி, திருச்சி-3.

'கண்கெட்டு ஆகிய கிரிக்கெட்'-தமிழீழ தாசனின் கவிதை, கிரிக்கெட் மயக்கத்தில் சந்திரிகாவின் நாடகத்தை உணரத் தவறிய எம் போன்றவர்களின் கண்களைத் திறப்பதாக இருந்தது.

ஏ.சி. நடேசன், குறிஞ்சிப்பாடி.

''ஈழத் தமிழருக்கு யாருமில்லை என்ற நிலை ஏற்படலாமா?''-என்று 'கேயார்' யாரைக் கேட்கிறார் என்றுதான் விளங்கவில்லை. மற்றபடி கட்டுரை சிறப்பாக இருந்தது.

S.R. கேதீஸ்வரன், திண்டுக்கல்

''இலங்கை: தமிழர்-சிங்களர் ஒரு வரலாற்றுப் பின்னணி''-இளைய தலைமுறையினர்க்குத் தேவையான தொடர். ஈழத்தைப் பற்றி விளங்கிக் கொள்வதற்கான இனிய கண்ணாடி.

T.K.R. ரவூப், மதுரை-1.

இந்திய விசா இலங்கையில் ரூ.17 ஆயிரத்திற்கு மேல் விலைபோகிறது என்ற செய்தியை சுப்பையர் சொல்லக் கேட்டுத் தூக்கிவாரிப் போட்டது.

தே. மணிமாறன் புதுவை-1.

''சிங்கள ராணுவத்திற்கு மக்களை மக்களாக நடத்தும் பக்குவம் கிடையாது'' என்ற தலைப்பின் கீழ் இடம்பெற்ற செய்திகள் உள்ளத்தை உறைய வைத்தன.

பெ.அ. கணநாதன், பழனி.

திருமலை ஆயர் கலாநிதி சுவாம்பிள்ளையின் பேட்டியை 'ஈழசுதந்திரனில்' படித்து மெய்சிலிர்த்தேன். இவரைப் போன்ற தீரமிக்க சுவாமிகள் இருக்கும்வரை தமிழினத்தை சிங்களப் பேரினவாதம் ஒன்றும் செய்துவிட முடியாது.

K.S.P. பஸ்தியாம்பிள்ளை, இராமநாதபுரம்.

''யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன்'' என்ற குறளுக்கு அருகே கூறிய உரை புதுமையானது. பொருத்தமானது.

புலவர் கணபதி, அம்பத்தூர்.

## சிங்கள அரசு சர்வதேச மத்தியஸ்தத்துடன் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும்

### கனடா மகாநாட்டில் கோரிக்கை

இன நெருக்கடியை தீர்த்துவைத்து நிலையான சமாதானத்தை காண்பதற்காக இலங்கை அரசாங்கம் கனடா, நோர்வே, சுவீடன், மற்றும் ஆஸ்திரேலியா, போன்ற நாடுகளின் உதவியுடன் சர்வதேச மத்தியஸ்தத்தின் [illegible] பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க [illegible]

தமிழ் மக்கள் இனத்தனித் தத்துவம், மொழி, கலாசாரம், சரித்திரம் மற்றும் பிரதேசத்தின் அடிப்படையில் ஒரு தேசிய இனமாக விளங்குகிறார்கள் என்பதையும் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் பாரம்பரியத் தாயகம் என்பதையும் சர்வதேச சட்ட மற்றும் ஐக்கியநாடு [illegible] ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதையும் சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தில் ரொரன்டோ நகரில் 'இலங்கை இன நெருக்கடியைத் தீர்ப்பதில் சர்வதேச சமூகத்தின் பங்கு' என்ற [illegible]

# ஒருகுறளை உணர்வோம்

## எழுமை எழுபிறப்பு என்பது என்ன?

''-அருகோ-''

',எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்'

-திருக்குறள் : 62

பரிமேலழகர் : எழுபிறப்பும் தீயவை தீண்டா-வினை வயத்தாற் பிறக்கும் பிறப்பேழின் கண்ணும் ஒருவனைத் துன்பங்கள் சென்றடையா. பழிபிறங்காப் பண்புடை மக்கட் பெறின்-பிறரால் பழிக்கப்படாத நற்குணங்களையுடைய புதல்வரைப் பெறுவானாயின் என்றவாறு.

அவன் தீவினை வளராது தேய்தற்குக் காரணமாகிய நல்வினைகளைச் செய்யும் புதல்வனைப் பெறுவானாயின் என்றவாறு ஆயிற்று.

பிறப்பு ஏழாவன :

''ஊர்வன பதினொன்றாம் ஒன்பது மானுடம்
நீர், பறவை, நாற்காலோர் பப்பத்து-சீரிய
பந்தமாந் தேவர் பதினா லயன்படைத்த
அந்தமில் சீர்த்தாவர நாலைந்து''

தந்தை தாயார் தீவினை தேய்தற்பொருட்டு அவரை நோக்கிப் புதல்வர் செய்யும் தான தருமங்கட்கு அவர் நற்குணம் காரணமாகலின், பண்பெனும் காரணப்பெயர் காரியத்தின் மேல் நின்றது.

மணக்குடவர் : எழுபிறப்பினும் துன்பங்கள் சாரா, ஒரு பிறப்பிலே பழியின்கண் மிகாத குணத்தினையுடைய புதல்வரைப் பெறுவாரராயின் என்றவாறு.

பரிதியார் : தேவர், மனிதர், மிருகம், ஊர்வன, நீர்வாழ்வன, பட்சி, தாவரம் எனும் எழு பிறப்பிற் சென்றாலும், எழு நரகிற்சென்றாலும் துன்பம் வராது, நல்ல புத்திரனைப் பெற்றவர்க்கு என்றவாறு.

டாக்டர் மு.வ. : பழி இல்லாத நல்ல பண்பு உடைய மக்களைப் பெற்றால், ஒருவனுக்கு ஏழு பிறவியினும் தீவினைப் பயனாகிய துன்பங்கள் சென்று சேரா.

இந்தக் குறட்பா 'புதல்வரைப் பெறுதல்' என்ற அதிகாரத்தின் கீழ் வைக்கப்பட்டிருப்பதால், அதற்கேற்பவே உரையாசிரியர்கள் பொருள் கூறியுள்ளனர்.

இவ்வதிகாரத் தலைப்புக்கு பொருள் கூறவந்த பரிமேலழகர்:- ''அஃதாவது இருபிறப்பாளர் மூவரானும் இயல்பாக இறுக்கப் படூஉங் கடன் மூன்றனுள் முனிவர் கடன் கேள்வியானும், தேவர் கடன் வேள்வியானும், தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலானும் அல்லது இறுக்கப்படாமையின், அக்கடனிறுத்தற் பொருட்டு நன்மக்களைப் பெறுதல்.'' என்கிறார். அதாவது முனிவர், தேவர், தென்புலத்தார் ஆகிய மூவருக்கும் கடன்பட்டிருப்பதாயும், அவற்றுள் முனிவர் கடன் கல்வி கேள்விகளாலும், தேவர் கடன் யாகம் வேள்விகளாலும், தென்புலத்தார் கடன் புதல்வர்களைப் பெறுவதால் மட்டுமே அடைக்கப்படும் என்கிறார்.

மணக்குடவரோ, ''புதல்வரைப் பெறுதலாவது புதல்வரைப் பெற்றதனாலாய பயன்கூறுதல்'' என்கிறார்.

பரிதியாரோ, ''இல்வாழ்க்கைக்குப் புதல்வர் வேண்டுதலால், அவர் குணத்தை யுரைத்தது'' என்கிறார்.

இவற்றில் பரிமேலழகர் உரை எடுத்துக்கூட்டி மிகைப்படுத்திச் சொல்வதாக இருக்க, மற்றவர்கள் உரை இயல்பாக இருப்பதைக் காண்கிறோம். எனினும் மு.வ. போன்றார் கூட பரிமேலழகரைப் பின்பற்றியே பொருள் கூறுவதைக் காண்கிறோம்.

இங்கு ஏழு பிறப்புக்கள் எவை என்பதற்கு பரிமேலழகர் ஒரு பழம் பாடலை எடுத்துக்காட்ட, பரிதியார் அப்பாடலின் கருத்தையே உரையாகக் கூறிவிடுகிறார். அதாவது தேவர், மனிதர், மிருகம், ஊர்வன, நீர்வாழ்வன, பறவை, தாவரம் என ஏழு பிறவிகள் இருப்பதாய்ச் சொல்கிறார். அப்படியானால் ஏழு பிறப்புக்களில் எந்தப் பிறிப்பிலாவது புதல்வனைப் பெற்றால் போதுமே!

உண்மையில் 'எழு பிறப்பு' என்று இங்கு வள்ளுவர் குறிப்பிடுவது வாழ்க்கையில் மாந்தன் மேற்கொள்கின்ற பல்வேறு பரிமாணங்களையன்றி வேறல்ல. அதாவது அவனுள் எழுகின்ற தோற்றங்கள். ஆம்; மகனாக, தந்தையாக, சகோதரனாக, மாமனாக, பாட்டனாக, நண்பனாக, பகைவனாக...இன்னும் சொன்னால் மாணக்கனாக, ஆசிரியனாக, முதலாளியாக, தொழிலாளியாக, ஆள்பவனாக, ஆளப்படுபவனாக, நீதிபதியாக, குற்றவாளியாக அவன் ஏற்கின்ற ஒவ்வொரு பாத்திரத்திலும் பழியில்லாத நல்ல பண்புடைய மக்களைப் பெற்றால், துன்பங்கள் அவனைத் துவளச் செய்யாமல் இருக்கும் என்பதே வள்ளுவர் இக் குறட்பா மூலம் சொல்ல வரும்படிப்பினையாகும்.

# சிங்கள ராணுவம் சதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விந்திய-இலங்கை ஒப்பந்தம் சிறந்த முன் மாதிரியாகவே இருந்தது.

### பௌத்த குருமார் நிராகரிப்பு

எனவே, அதைத் தொடர்ந்து மேற் செல்வதாகவே எந்த மாற்றுத் திட்டமும் இருக்க வேண்டும். ஆனால் தமிழ் மக்களுக்கு எதையும் கொடுக்கத் தயாராயில்லாதவர்கள்-இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கொடுக்கப்பட்டதையும் தட்டிப் பறிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தவர்கள், அதை வெளியரங்கமாகச் சொல்ல முடியாமல், புதிய திட்டமென்ற பெயரில் உலகையும் இந்தியாவையுட் ஒருங்கே ஏமாற்ற முனைந்திருப்பதே சந்திரிகாவின் அதிகாரப் பரவல் திட்டமாகும்.

அவர் எதிர்பார்த்ததைப் போலவே சிங்கள பௌத்த குருமார்களின் சங்கங்கள் அத்திட்டத்தை அடியோடு நிராகரித்து விட்டன.

முந்தைய ஆளுங்கட்சியும், பிரதான எதிர்க்கட்சியுமான ஐக்கிய தேசியக் கட்சியும் (UNP) அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அது மட்டுமல்ல, இந்திய-இலங்கை ஒப்பந்தம் நிறைவேறக் காரணமாக இருந்தவர்களில் ஒருவரான (கடந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் முதலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக இருந்து கொலை செய்யப்பட்ட) காமினி திசநாயகாவின் ஆதரவாளர்களும், சந்திரிகாவின் அதிகாரப் பரவல் திட்டத்தை ஆதரித்தவர்கள் என்று சொல்லப்படுபவர்களுமான (ஆனால் அதை அவர்கள் மறுத்துள்ளனர்.) திரு. ஃபெஸ்டஸ்பெரேரா, விமல் விக்கிரமசிங்கே ஆகியோர் அக்கட்சியின் செயற்குழுவிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

### சிறீமணி அத்துலத்முதலி

ஐக்கிய தேசியக்கட்சியின் மூத்த தலைவர்களான அவர்கள் நீக்கப்பட்டது ஏன்? இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஆதரித்தவர்கள்; இப்போது அதிகாரப் பரவல் திட்டத்தையும் ஆதரித்தார்கள் என்கிற குற்றச்சாட்டின்பேரில்தான்.

பிரதான எதிர்க்கட்சியில் இந்த நிலையென்றால், சந்திரிகாவின் தலைமையில் உள்ள ஆளும் பொது சன ஐக்கிய முன்னணியில் சந்திரிகாவுக்கு அடுத்து பலம் வாய்ந்தவராகக் கருதப்படும் சிறீமணி அத்துலத் முதலி (ஐ தே க அரசில் ராணுவ மந்திரியாக இருந்து பிரேமதாசா காலத்தில் கொலையுண்ட திரு அத்துலத் முதலியின் மனைவி) சந்திரிகாவின் அதிகாரப் பரவல் திட்டத்தை வன்மையாக எதிர்த்துள்ளார். தற்போதைய அரசியலமைப்புச் சட்டத்தில் எவ்வித மாறுதலும் கூடாது என்று கண்டிப்பாகக் கூறியுள்ளார்.

### சந்திரிகாவின் அச்சுறுத்தல்

சரி; சந்திரிகாவேனும் அதை நிறைவேற்ற உருப்படியான செயல்களில் ஈடுபட்டுள்ளாரா என்றால், இல்லை; அத் திட்டத்தை நாடாளு மன்றத்தெரிவுக்குழுவுக்கு அனுப்பி வைத்து விட்டு, நடைமுறையில் ராணுவ நடவடிக்கைகளின் மூலம் தமிழ்மக்களையே அழித்தொழிக்க முற்பட்டிருக்கிறார்.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்கள் பகிரங்கமாக எதிர்க்கவும், தமது அதிகாரப்பரவல் திட்டத்தை வரவேற்கவும் முன் வராவிட்டால், பெரும்பான்மைச் சிங்கள மக்கள் தாக்குதலில் இறங்குவதைத் தடுக்க முடியாது என்று இனவாத முறையில் எச்சரிக்கின்ற அவர், வடக்கில் முப்படைகளையும் முடுக்கி விட்டு, வான், கடல், தரை மூன்று வழிகளாலும் தமிழ் மக்களை முடிக்கத் தலைப் பட்டிருக்கிறார்.

யாழ்ப்பாண நகரைக் கைப்பற்றியதை இந்தியா கண்டுகொள்ள வில்லை என்ற தைரியத்திலும், தற்போது இந்தியாவில் தேர்தல் நடப்பதால் தமிழ்நாட்டு மக்கள் உட்பட எவரும் இலங்கையில் என்ன செய்தாலும் கவனிக்க மாட்டார்கள் என்ற மிதப்பிலும் தேர்தலின்பின் ஒருவேளை புதிதாக ஆட்சிக்கு வருபவர்கள் இலங்கைத் தமிழர் விடயத்தில் அக்கறை காட்டினால் என்ன செய்வது என்ற கவலையிலும், அதற்கு முன்பாகவே யாழ்ப்பாண நகரில் செய்தது போல யாழ்குடாநாடு முழுவதிலும் செய்து, தமிழ்மக்களை ஒடுக்கி முடிக்க வேண்டும் என்று திட்டமிட்டே கடுமையான தாக்குதலில் சிங்கள ராணுவத்தை இறக்கி விட்டுள்ளார் சந்திரிகா.

தவிரவும், இலங்கை மலையகத்தில் இந்திய வம்சாவளி தோட்டத் தொழிலாளர்கள் இப்போது ஊதிய உயர்வு, வேலை உத்தரவாதம் கோரி வேலை நிறுத்தம் செய்கின்றனர். அதற்கு இந்தியாவின் அனுதாபம் ஏற்பட்டுவிடாமல், அதை மறைக்கவும் யாழ் யுத்தத்தை முடுக்கிவிட்டிருக்கிறார் சந்திரிகா.

ஏற்கனவே யாழ் நகரிலிருந்து வெளியேறிய ஆறு லட்சம் தமிழ் மக்கள் கிளிநொச்சிப் பகுதியில் எந்தவித உதவிகளும் வழங்கப்படாமல், தொண்டு நிறுவனங்களின் சேவையும் கிடைக்கவிடாமல் தடைசெய்யப்பட்டு கடுமையான வறுமையாலும், நோய்களாலும் பாதிக்கப்பட்டு அழிந்துகொண்டு வருகின்றனர்.

### மீண்டும் வெலிக்கடை

தலைநகர் கொழும்பிலோ தமிழ் மக்கள் ஒவ்வொருவருமே குற்றவாளிகள் போல நடத்தப் படுகின்றனர். திடீர்க் கைதுகளும் சித்ரவதைகளும் அன்றாடம் நடைபெறுகின்றன. முன்பு வெலிக்கடைச் சிறைச் சாலையில் குட்டிமணி, தங்கத்துரை உட்பட தமிழர்கள் சிங்கள வெறியர்களால் படுகொலை செய்யப்பட்டதைப் போல இப்போதும் சிறைச் சாலைகளில் அடைக்கப் பட்டிருக்கும் தமிழர்கள் படுகொலைக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர். கடந்த 19-2-96 அன்று பொரல்ல சிறைச் சாலை அதிகாரிகளே நூறு பேர் திரண்டு போய் தமிழ்க்

(12-ம் பக்கம் பார்க்க)

(10ம்-பக்கத் தொடர்ச்சி)

தொனிப்பொருளில் நடத்தப்பட்ட மகாநாட்டில் இவ்வாறான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கனடிய தமிழர் சங்கங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டிலான இந்த மகாநாடு கல்வி ஆய்வுகளுக்கான ஒன்ராறியோ நிறுவனத்தில் நடைபெற்றது.

இலங்கையில் சமாதானத்தைக் காண்பதற்கான முயற்சிகளுக்கு ஆதரவைத் திரட்டுவதற்கும் தமிழ் மக்களின் நியாயபூர்வ அபிலாஷைகள் மற்றும் புலிகளின் பங்கு ஆகியவை குறித்து ஆராயவும் ஆக்கபூர்வமான சர்வதேச பிரதிபலிப்பை உருவாக்குவதற்கான விதப்புரைகளைச் செய்வதற்குமே இந்த மகாநாடு ஏற்பாடு செய்யப்பட்டதாக சர்வதேச தமிழ் சம்மேளனம் விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இம்மாநாட்டில் பல கல்விமான்களும் இலங்கை நெருக்கடியுடன் தொடர்புடைய பல்வேறு விவகாரங்கள் நிகழ்வுகள் தொடர்பாக விரிவான ஆய்வறிக்கைகளை சமர்ப்பித்தனர்.

www.padippakam.com






யாரும் எத்தனை கேள்விகளையும் எழுதி அனுப்பலாம். ஆனால் பதில் அளிப்பதற்கான கேள்விகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை குயுக்தியாரைச் சார்ந்தது. * இக்குறியிட்ட கேள்வி பரிசு பெறுகிறது. வாசகர்களே! குயுக்தியாரிடம் பதில் பெற கேள்விகளைத் தாராளமாக அனுப்புங்கள்.

சீ. பாஸ்கரன்-கும்பகோணம்

கேள்வி : விட்டுக் கொடுத்தேனும் சமாதானத்தை நிலை நாட்டப் போவதாக வந்த சந்திரிகா, எதையும் விட்டுக் கொடுக்காமல் சண்டைக் கிடாவாக முண்டுபிடிப்பது எதனால் ?

பதில் : யாழ்ப்பாண வெற்றி தந்த இறுமாப்பினால் !

L.K. சாந்தகுமார்-இராசபாளையம்

கே : தேர்தலின் போது இனப் பிரச்சினைத் தீர்வு பற்றிப் பெரிதாகப் பேசிய பொது ஜன ஐக்கிய முன்னணியில் உள்ள இடதுசாரிகள், இப்போது சந்திரிகா ஜெயவர்த்தனா பாதையில் போவதைக் கண்டும் காணாதது போல் நடந்து கொள்வதேன் ?

ப : சிங்கள அரசியல்வாதிகள் வலதுசாரியானாலும் இடது சாரியானாலும் பேரினவாதத்திற்கு அப்பாற்பட்டவர்களல்ல என்பது தான் !

மா.பா. ஐராவதம்-தஞ்சாவூர்

கே : குயுக்தியாரே! தமிழன் எப்போதுதான் ஒன்று படுவான் ?

ப : நானும் ஒரு தமிழன் தானே! இதற்கு எப்படி என்னால் பதில் சொல்ல முடியும்?

கே : ''எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார். இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே'' என்ற பாரதிதாசனின் கனவு பலிக்குமா ?

ப : அது எப்போது (பகலிலா, இரவிலா?) கண்ட கனவு என்று கேட்டுத்தெரிந்து கொள்ள இப்போது அவர் இல்லையே !

D.V. இராமநாதன்-காரைக்குடி

கே: 1980, 84, 89 தேர்தல்களின் போது இந்தியாவில் முக்கியத்துவம் பெற்றிருந்ததுபோல ஈழப் பிரச்சினை இந்த 1996 தேர்தலில் முக்கியத்துவம் பெறவில்லையே ஏன் ?

ப : 1991 தேர்தலில் ஏற்பட்ட எதிர்மறைப்போக்குத்தான் காரணம் '

கே : ''தமிழன் என்றோர் இனமுண்டு. தனியே அவர்க்கோர் குணமுண்டு''-நாமக்கல் கவிஞர் எதை வைத்து இப்படிப் பாடினார் ?

ப : தமிழன் என்று ஒரு இனமுண்டு என்று சொன்னாலும் சாதிகளின் பெயராலேயே இயங்குகின்றதுதான் அவன் குணம்; தனித்தனியாகச் சிந்திப்பதுதான் அவன் மனம் என்பதை வைத்துப் பாடியிருக்கலாம்.

ஆ.சா குருமூர்த்தி-கோயில்பட்டி

கே : புலம் பெயர்ந்த இலக்கியம் தமிழுக்குப் புது வரவு தானே ?

ப : அதற்காக உலகமெங்கும் தமிழினம் அகதியாகி அல்லலுற வேண்டுமா என்ன?

கே : ஈழப் போராட்டத்தால் ஈழம் கைகூடா விட்டாலும் ஈழத் தமிழினம் ஒரு பன்னாட்டு இனமாகப் பரிணமித்து விட்டதை மறுக்க முடியாதுதானே ?

ப : ஒரு சுதந்திர நாடேனும் இல்லாமல் ஒரு இனம் எத்தனை நாடுகளில் பரவினாலும் அதற்குப் பன்னாட்டு அந்தஸ்து கிடைத்து விடாது.

T.R.P. ரபியுத்தீன்-காயல்பட்டினம்

* கே : இத்தனை அழிவுக்குப் பின்கூட இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஒற்றுமை உருவாகாததற்கு யார் காரணம் ?

ப : பிரித்தாளும் சிங்களப் பேரினவாதம் என்று ஒற்றை வரியில் பதில் சொல்லிவிட முடியாது. அதனிடம் சலுகைகளைப் பெறத் தமிழ் பேசும் மக்களின் தலைமைகள் சோரம் போன சுயநலம்தான்!

கே: தமிழ் மக்கள் யாரை நம்பின் விடுதலை கிட்டும்?

ப: தம்மையே நம்பி, தர்மத்தை நம்பிப் போராடினால் வெற்றி கிட்டும்!

# திருகோணமலையில் தீவிர தாக்குதல்! சோதனைகள்

திருகோணமலை சிவன் கோவிலடி பகுதியில் போலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தனர். இதனைத் தொடர்ந்து இப்பகுதி வாசிகள் சிவன் கோவில் அருகே அழைத்துச் செல்லப்பட்டு அடையாளம் காணப்பட்டனர்.

அடையாள அட்டைகள் மற்றும் இப்பகுதியில் தங்கியிருப்பது தொடர்பாக தீவிர விசாரணை இடம் பெற்றன. நீண்ட நேரம் இத்தகைய விசாரணைகள் இடம்பெற்றன இதனைத் தொடர்ந்து சிலர் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதே வேளை நகரில் உள்ள சோதனைச் சாவடிகள் பலப்படுத்தப்பட்டுவருகின்றன மேலதிக போலீஸார் இச்சாவடிகளில் கடமைக்கு அமர்த்தப் பட்டுள்ளனர். உவர் மலை சந்தி சோதனைச் சாவடி விவேகானந்தர் கல்லூரிக்கு அண்மையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. சிவன் கோவிலடி சோதனை சாவடியில் மேலதிகசோதனைக்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப் பட்டு வருகின்றன. நகரில் அடிக்கடிகேட்கும் ஹெலிகளின் சத்தம் போர்க்கால சூழலை நினைவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளது. வீதிச்சோதனைகளும் திடீர் திடீரென இடம் பெற்று வருகின்றன.

# வெடிச்சத்தம் கேட்டால் போதும்...

கொழும்பு புறக்கோட்டை செ. ஜோன்ஸ் சந்தை பகுதியில் கேட்ட ஒரு வெடி சத்தத்தையடுத்து அப்பகுதி பெரும் பரபரப்படைந்தது குண்டொன்று வெடித்துவிட்டது என்ற பீதியில் மக்கள் நாலாபுறமும் சிதறி பதறியடித்துக்கொண்டு ஓடினர். கடைகள் எல்லமே பூட்டப்பட்டு சற்று நேரம், அப்பகுதி வெறிச்சோடியது.

பின்னர் விசாரித்துப் பார்த்தபோது சந்தைப்பகுதியில் உள்ள ட்ரான்ஸ் போமர் ஒன்றே பெருஞ் சத்தத்துடன் வெடித்தது என்ற உண்மை தெரிய வந்தது இதையடுத்து பரபரப்பு தணிந்து மீண்டும் மக்கள் வழமைபோல் நடமாடினர். கடைகளும் திறக்கப் பட்டு வியாபாரம் நடை பெற்றது.

இதேபோலவே கொழும்பு கொட்டாஞ்சேனை, பாபர் வீதியிலும் பாரிய வெடிச்சத்தமொன்று கேட்டதையடுத்து மக்கள் பீதியடைந்து போயினர். லொறியொன்றில் இருந்து சாயப் பையொன்று கீழே வீழ்ந்தோலேயே இச் சத்தம் கேட்டதாக பின்னர் தெரிய வந்தது. வெடிச்சத்தம் கேட்டதும் மக்கள் அங்குமிங்கும் அல்லோல கல்லோலப் பட்டு ஓடியதால் ஆமர் வீதிப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

கைதிகளைப் பயங்கரமாகத் தாக்கியுள்ளனர். தாக்கப்பட்டவர்களில் ஒருவர் 63 வயதான A.P. இராமையா. இவர் எப்படி புலியாக இருக்க முடியும்?

அண்மையில் நடந்த மத்தியவங்கி குண்டு வெடிப்பைச் சாக்கிட்டு 2000க்கு மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் பிடிக்கப்பட்டுள்ளனர்.

## பாலியல் கொடுமை

கிழக்கு இலங்கையிலோ மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் ராணுவ நடவடிக்கை என்று அறிவிக்கப்படாமலே சிங்களப் படையினர் தமிழ்க்கிராமங்களில் புகுந்து தமிழ் மக்களை ஆடு மாடுகளைப் போல வெட்டிச் சாய்க்கும் விபரீதங்களும், தமிழ்ப் பெண்களைக் கண்மூடித் தனமாகக் கற்பழிக்கும் கொடுமையும் நடந்து வருகின்றன. கடந்த 11-2-96 அன்று குமாரபுரம் என்ற சிற்றூரில் தமிழர்களைக் கொன்று குவித்த சிங்கள ராணுவத்தினர், 16 பேர் சேர்ந்து தனலட்கமி என்ற ஒரு 17 வயது தமிழ்ப் பெண்ணை கற்பழித்துவிட்டுக் கொலை செய்துள்ளனர்.

இதுபோன்ற அநியாயங்களில் சிங்கள ராணுவத்தினர் ஈடுபடுவது தமிழ்ப்பகுதிகள் எல்லாம் பரவி வருகின்றன.

## இன்றியமையாப் பொறுப்பு

எனவே, இந்தியா இதில் உடனடியாகத் தலையிட்டாக வேண்டும். இத்தனையும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை தவிடு பொடியாக்கும் நோக்கத்துடன் செய்யப்படுவதாகையால், அந்த ஒப்பந்தத்தின் மூலம் தான் ஏற்றுக்கொண்ட பொறுப்பை நிறைவேற்றவும், தமிழ் மக்களைக் காப்பாற்றவும், இந்தியா உடனே தலையிட வேண்டியது இன்றியமையாததாகும்.

அதற்கு முதற்படியாக தமிழ்நாட்டுக் கட்சிகளும், தலைவர்களும் தேர்தல் ஒரு பக்கம் இருந்தாலும், இலங்கையில் உள்ள சகோதரத்தமிழ் மக்களைக் காப்பாற்ற, தமிழ் மக்களுக்கெதிரான சந்திரிகாவின் படையெடுப்பைத் தடுக்க ஆவன செய்ய வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

# மக்கள் தானா இலக்கு?

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள வடமராட்சி மற்றும் தென்மராட்சிப்பகுதிகளில் கடுமையான விமானக்குண்டு வீச்சுக்களும் ஷெல் தாக்குதல்களும் இடம் பெற்றுள்ளன. வடமராட்சியில் பல வீடுகள் எரிந்து நாசமாகியுளளதுடன், தென்மராட்சியில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி சேதமடைந்துள்ளது.

யுத்தத்தின் போது, பொதுமக்கள் இலக்குகளைத் தாக்கக்கூடாது எனக் கடுமையான உத்தரவை அரசாங்கம் பிறப்பித்துள்ளதாகக் கூறப்பட்டாலும் கூட, பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் இந்த அரசின் காலத்தில் கூட தீவிரப் படுத்தப்பட்டே வந்துள்ளது.

நவாலி தேவாலயம் மீதான தாக்குதல், நாகர் கோவில் பாடசாலை மீதான தாக்குதல், மன்னார், நாச்சிக்குடாவில் பொதுமக்கள் மீதான தாக்குதல் என்ற வரிசையில் இப்போது சாவகச்சேரி மகளிர் கல்லூரியும் ஷெல் வீச்சுக்கு இலக்காகியுள்ளது.

'ஷெல்' தாக்குதல், விமானக்குண்டு வீச்சு, ஹெலிகாப்டர் தாக்குதல்கள் போன்றன எழுந்தமானமாகவே மேற்கொள்ளப்படுகின்றன. எவ்வித முன்னறிவிப்போ எச்சரிக்கையோ இன்றி மேற்கொள்ளப்படும் இத்தாக்குதல்களால் பொதுமக்களே பெருமளவுக்குக் கொல்லப்படுகின்றார்கள்.

இதுதொடர்பாக பலமுறை அரசாங்கத்துக்குச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. ஆனால், அரசின் வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படுவதில்லை. மீண்டும் மீண்டும் மக்கள் வாழும் பகுதிகளிலேயே தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன!

சமாதானத்தைஒருபுறத்தில் பேசிக் கொண்டு மக்கள்மீது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி தமிழர்களை மேலும் அந்நியப்படுத்துவதற்கே இதுஉதவும்.

பயங்கரவாதிகளின் முகாம்களையே தாக்கினோம் எனவும், கொல்லப்பட்ட பயங்கரவாதிகளின் எண்ணிக்கை என சில தகவல்களையும் வெளியிடுவதை சர்வதேச சமூகம் நீண்டகாலத்துக்கு நம்பிக்கொண்டிருக்காது!

தாக்குதல்களின் போது பொதுமக்களின் இலக்குகள் தவிர்க்கப்படுவதையிட்டு அரசாங்கம் சில கண்டிப்பான உத்தரவுகளைப் பிறப்பித்து அதனைக் கண்காணிப்பது அவசியம்.

Edited Printed and Published by ARUNACHALAM GOPALAN, No 14, Sait Colony, Ist Street, IIIrd Floor, Egmore, Madras-00008.
Printed at Kuralnery Achagam, Madras-94.

சனநாயகம்-சமதர்மம்-சமயசார்பின்மை-நமது பாதை

படிப்பகம்